# அர்ச்சுனா

கல்வி - முயற்சி - பெருவாழ்வு

டிசெம்பர் '99 - ஜனவரி 2000



விலை ரூ.12.50


சிறுவர் பல்சுவை மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதசமி விழாவில் மீண்டும் அர்ச்சுனா



பண்ணும் பரதமும் தந்தருள் தாயே....
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



பாடும் பணியில் பணித்தருள் தாயே......
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவிகள்



'அர்ச்சுனா' தமிழ் கூறும் நல் உலகிற்கு சமர்பிக்கப்படுகின்றது.



அரவணைப்புடன் ஆசியுடன் 'அர்ச்சுனா' சின்னஞ் சிறு கைகளால் வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா

கல்வி - முயற்சி - பெருவாழ்வு

ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைராய் நாளைவிளங்கிப் போகிறார்

டிசெம்பர் 1999 தனு 4 கணை 2




## மலரும் உள்ளங்களே!



இது "கிறிஸ்மஸ்" எனப்படும் நத்தார்க் காலம். நத்தார் என்றதும் சிறுவர்களாகிய உங்களுக்கு மகிழ்ச்சி பொங்கும். நத்தார்ப் பாப்பா உங்கள் மனக்கண் முன் தோன்றுவார். அவர் இம்முறை தரப்போகும் இனிப்புப் பண்டங்களும் பரிசுப்பொருள்களும் எவையாக இருக்கும் என்று ஊகித்துப் பார்ப்பீர்கள்.

யேசுகிறிஸ்து மக்களின் இரட்சகராகப் போற்றப்படுகிறார். தேவனாகத் துதிக்கப்படுகிறார். அவரின் பிறப்பு உலகளாவிய முறையில் வருடாந்தம் கொண்டாடப்படுகிறது.

உலக மக்கள் உய்யும் பொருட்டு நற்போதனைகளை வழங்கிய பிதாவாகவும் யேசுபிரான் விளங்குகிறார். அவர் சிறுவர்கள் மேல் அன்பு கொண்டவர். சின்னஞ்சிறியவர்களை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் விண்ணரசு அவர்களுடையதே - என்று அவர் மொழிந்தார்.

பிறர் மீது அன்பு செலுத்தவேண்டும்; நேசிக்கவேண்டும். அடுத்தவருக்கு உதவ வேண்டும் என்ற அவரது போதனைகளைப் பின்பற்றப் பயிலுங்கள். அதுவே உங்களை எதிர்காலத்தின் நற்பிரசைகளாக்கும். நீங்கள் நல்லவராகவும் வல்லவராகவும் வளரவேண்டும் என்பதே உங்கள் தாய் தந்தையரின் விருப்பம். எமது விருப்பமும் அதுவே.

எங்கள் நத்தார் வாழ்த்துகள்உங்களுக்கு!


-ஆசிரியர்





346744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்னை மண் தன் துயில் நீத்தாள். 'பொலபொல'வென்று புதிய பொழுதொன்று புலர்ந்தது. 'தகதக'வென்று பொற்கிரணங் களை அள்ளி வீசிக்கொண்டு கதிரவன் கிழக்கில் உதயமானான். நீர்நிலைகளின் தாமரை மொட்டுக்கள் அவன் வரவு கண்டு 'கலகல'வென்று தம் இதழ் விரிக்கத் தொடங்கின. வேறு நறுமண மலர்கள் எல் லாம் 'கமகம'வென்று மணம் வீசி மலர்ந்து கொண்டிருந்தன. மரங்களின் பச்சை இலை களில் ஒட்டியிருந்த பனித்துளிகள் அத்த னையும் 'பளபள'வென்று வெண் முத்துக் களாய் ஒளிவீசிக் கொண்டிருந்தன. ஆலய மணிகள் எல்லாம் 'ஓம்ஓம்' என்று முழக்க மிட்டு ஓங்கார நாதம் எழுப்பின. இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று புள்ளினங்கள் எல்லாம் 'சளசள'வென்று கதை பேசிப் பறந் தன.

இவையெல்லாம் இந்தப் பூவுலகில் புது உயிர் ஒன்று வந்து பிறக்கப்போகின்றது என்பதைக் கட்டியம் கூறும் மங்கல நிகழ் வுகள் போலவே தோன்றின. நிச்சயம் அது ஒரு புனித ஜீவனாகத்தான் இருக்கும். புத்த ருக்கு இணையான தெளிந்த ஞானத்துட னும் இயேசுநாதரின் தீர்க்கதரிசனத்துடனும் முத்தொழில் வித்தகர்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற தெய்வங்களின் வல்ல பெரும் சக்தியுடனும் தோன்றும் ஓர் அவதாரமாகத்தான் அது உருவெடுக்கும்.

அன்றுதான் பிறந்திருந்தது அந்தச்சின்னப் பூச்சி. ஆனால் அது பிறந்த விதம் யாருக் கும் தெரியாது. தன் மண்ணளவு கண் களைக் கொட்டக்கொட்ட விழித்து இவ்வுல கத்தைப் பார்த்தது அது. பரந்து கிடந்த பூமியும் விரிநது கிடந்த நீலநிற ஆகாயமும் அகன்ற கடற் பரப்பும் அடர்ந்த காடும் உயர்ந்த மலைத்தொடர்களும் எல்லாமே அதன் கண்களுக்குத் தெரிந்தன. இன்னும் பச்சைப்பசேலென்ற வயல்வெளிகளும், மரங் களும் செடிகளும் கொடிகளும் பூக்களும் காய்களும் கனிகளும் அதன் கருத்தைக் கவர்ந்தன.

"இவையெல்லாம் யாருக்காக? எனக்கா கத்தானே!" என்று சொல்லி இறும்பூதெய்தி யது அந்தச் சின்னப் பூச்சி.

தன் ஈரச்சிறகுகள் காயும்வரை காத்தி ருந்த பூச்சி.... மெல்ல ஊர்ந்து..... பின் எழுந்து பறந்தது. அன்று மலர்ந்த மலர் ஒன்றின் மேல் அது வந்து அமர்ந்தது. அந்தப் புத்தம் புதிய மலரில் நிறையத் தேன் இருந்தது. தேனைக்கண்ட பூச்சியின் நாவில் நீர் ஊறியது. தேனைக் குடிப்பதற் காக ஆசையுடன் தன் சிறுகொம்புகளை நீட்டியது. அந்தநேரம் திடீரென்று தேனீ ஒன்று அவ்விடம் வந்து சேர்ந்தது.

"யார் அது?" என்று பூச்சியின் காதுகள்



செவிடுபடும்படி சத்தமாய் அதட்டிக்கேட்டது தேனீ.

"நான் தான்!" என்றது சின்னப்பூச்சி.

"நான் தான் என்றால்...... நீயென்ன இந் தக் காட்டுக்கே அரசனா?"

"அரசனுமில்லை ஆண்டியுமில்லை!"

"வேறு யார்? அனைவரும் தெரிந்த தலை வனோ?"

"இல்லை. என் பசியைப் போக்குவதற் காக இந்தப்பூவில் தேன்குடிக்க வந்திருக் கும் சின்னபூச்சி நான்."

"பூ எனக்குரியது. உடனடியாக இவ் விடத்தை விட்டுப்போய்விடு"

"இயற்கையின் படைப்பு..... எல்லோருக் கும் சொந்தமானது."

"பூக்களின் தேன் எல்லாம் தேனீக்கே சொந்தமானது...... அறிந்துகொள் அற்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சியே!"

"தேனீக்குத்தான் தேன் சொந்தமான தென்று சாசனம் எழுதியவர் யார்?"

"என்னைப் படைத்த இறைவன்தான்"

"என்னையும் அவர்தானே படைத்தார்"

"இருக்கலாம். ஆனால் பூ என் உடைமை யானது. இக்கணமே இவ்விடம்விட்டு ஓடி னால் உயிர் தப்புவாய். இல்லையோ இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோவாய்"

"....................."

சின்னப்பூச்சி மௌனமாகியது. தேனீயு டன் போராடி வெல்லும் உடல்வலிமை தனக்கில்லை என்பது பூச்சிக்குத் தெரிந்தது. அதனால் மெல்ல அப்பூவை விட்டு விலகிச் சென்று ஓர் ஓரமாய் அமர்ந்து கொண்டது. இந்த வானமும் பூமியும் காடும் கடலும் மலையும் வயலும் பூக்களும் கனிகளும் எதுவுமே எனக்குச் சொந்தமானதில்லையா? என்று எண்ணி அது கவலையுற்றது. தன் தலையைக் குனித்து சிந்தனை செய்தது.

தேனீ வெற்றிக் களிப்புடன் பூவைச் சுற்றி வந்து ரீங்காரமிட்டது. பின் பூமேல் அமர்ந்து தன் இரு கொம்பையும் நீட்டித் தேன் அருந் தத் தொடங்கியது. அந்தநேரம் அவ்விடம் நோக்கி சிட்டுக்குருவி ஒன்று பறந்து வந் தது. யாரும் எதிர்பாராத விதமாய் தேனீ யைப்'பட்'டென்று கௌவிப் பறந்து போனது.

சின்னப்பூச்சி இதையெல்லாம் தன் கண் களால் பார்த்தது.


"ஓ...... என்ன விந்தையிது? இறைவனின் நியதிக்கு இயற்கையும் இயைந்து போகும் தன்மையிதாமோ? மின்னல் போல் வந்து மறையும் இந்த உயிர் வாழ்வில் யாருக்கும் எதுவும் சொந்தமானதில்லை. இவ்வுலகில் எவரும் நிலையாக வாழ்ந்ததுமில்லை", என்று தனக்குள் தானே சொல்லித் தெளிந்து கொண்டது அந்தச் சின்னப்பூச்சி.

(யாவும் கற்பனை)

-சந்திரா தனபாலசிங்கம்-

# முட்டாள் விவசாயி

விவசாயி ஒருவன் வயலில் வேலை செய்து கொண்டிருந் தான். பசியும் தாகமும் எடுத்தது. அண்மையில் உள்ள கடைக்குச் சென்று ஒரு வடையை வாங்கி உண்டான். பசி அடங்கவில்லை. இரண்டாவது வடையையும் வாங்கி உண்டான். பசி அடங்க வில்லை. மூன்றாவது வடையை யும் வாங்கி உண்டான். அப்போ தும் அடங்கவில்லை. கடையில் வடையும் முடிந்துவிட்டது.



தோசை மாத்திரமே இருந் தது. ஒரு தோசையை வாங்கி உண்டான்.இப்போது பசி அடங்கி விட்டது.

விவசாயிக்கு மிகவும் கவலை. "மூன்று வடைகளுக்கும் வீணாகச் செலவுசெய்து விட்டேனே. வடைகளைத் தின்பதற்குப் பதிலாக முதலிலேயே தோசை ஒன்றை வாங்கித் தின்றிருக்கலாமே. வீண்செலவாகி விட்டதே" எனக் கவலைப்பட்டான்.

உண்மையில் ஒரு தோசை சாப்பிட்டதால் அவனது பசி அடங்க வில்லை. அவனது பசியை அடக்கியது முதலில் சாப்பிட்ட வடைகளும் தான் என்பதை அந்த முட்டாள் விவசாயி உணரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதங்கிப்போன துளிர்

கந்தனின் மணியோசையால் பக்தி பிர வகிக்கும் கிராமம் மாவிட்டபுரம். அங்கே ஓர் அழகிய மனையில் மனைவி, பிள்ளை தான் என்று யார்க்கும் தொந்தரவு இல்லாத குடும்பமாய் வாழ்ந்து வந்தான் சிதம்பரம். எண்பத்தொன்பதில் பாமா கைக்குழந்தை யாக இருக்கையில் பலாலி இராணுவம் முன்னேறிய போது மனைவியையும் தனது ஒரு காலையும் இழந்து கைக்குழந்தை யோடு இருபாலைக்குக் குடிபெயர்ந்தான். வீதியோரத்தில் ஒரு சைக்கிள்கடை. அது தான் அவனுக்கு வீடு. வறுமையின் பிடியில் வாடியபடியே பத்து வருடங்கள் ஓடிவிட் டன.

பாமா இப்போது பத்து வயதுச் சிறுமி. அவளுக்கு தினமும் அந்தக் கடையில் படுத்து எழும்பி வாழுவது பிடிக்கவில்லை. ஏனைய பிள்ளைகளைப் போல் ஏன் தான் வாழமுடியாதா? சிந்தனை அரும்பவே "அப்பா...... ஏனப்பா எங்களுக்கு வீடில்லை?"

"அது பிள்ளை எங்களிட்டை காசில்லை. வீடுகட்ட நிறையக்காசு வேணும் பிள்ளை"

"ஏனப்பா கடையில் கிடைக்கிறகாசு....."

"அது போதாதம்மா....... இந்தக் காசு சாப்பிடவே போதாது".

"அப்ப இதிலதான் தினமும் வாழ வேண்டுமா?...." அவளுடைய ஏக்கம் கலந்த வார்த்தைகள் சிதம்பரத்தின் உள்ளத்தை வாட்டியது.... பெருமூச்சோடு அவன் சிந்தனை தொடர்ந்தது. அவளுக்கும் பத்து வயதாச்சு. நாளைக்கு பெரிய பிள்ளையா கப் போறாள். எனக்கும் வயது போட்டுது. அவளை நாளைக்கு யார் பார்க்கிறது.

"என்னப்பா யோசிக்கிறீங்கள்".

"ஒன்றுமில்லைப் பிள்ளை. முந்தி நானும் பணக்காரன்தான். எனக்கும் வீடிருந்தது. வயலிருந்தது. நெல் இருந்தது. இப்ப எல் லாம் பறிபோட்டுது. உன்னை என்ர கையில தந்திட்டு கொம்மாவும் போயிட்டா. நாங்க சந்தோசமா இருந்ததைப் பார்க்க அந்த ஆண்டவனுக்குப் பிடிக்கேல்ல".

அவனுடைய குரல் கம்மியது. கண் களில் நீர் மல்கியது.

"ஏதோ இப்ப ஒரு வயித்துச் சோறாவது கிடைக்குது. நீ படிச்சு முன்னுக்கு வந்தாத் தான் என்னையும் பார்ப்பாய். இல்லாட்டி பிச்சைதான் எடுக்க வேணும்".

"அப்பா...... நான் இனிப் பள்ளிக்கூடம் போகேல்ல. சப்பாத்து போடவில்லை எண்டு ரீச்சர் அடிக்கிறா....... ஊத்தைச் சட்டை போட்டுக் கொண்டுவாராய் எண்டு பிள்ளை யள் பழிக்கினம்".

"ம்..... அதுகளுக்கு எப்படித் தெரியும்... எங்கட கஷ்டம். இந்த உலகத்தார் யாரை யுமே புரிஞ்சு கொள்ளமுடியேல்ல.... சப்பாத் துக்கு எங்க போவன்?"

"பாமா..... என்ர ராசாத்தி நீ பள்ளிக் கூடத்துக்குப் போம்மா.... நான் உனக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இண்டைக்குச் சப்பாத்து வாங்கித்தாரன்..."

"பசிக்குது சாப்பாடு...?"

"இந்தாம்மா! இந்தத் தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் போ. நான் மத்தியானம் பிள்ளைக்கு மீன் வாங்கிச் சமைச்சு வைக்கிறேன்".

"சரிப்பா...."

அவள் வெறும் வயிற்றுடன் காலில் தேய்ந்த செருப்பும்..... கசங்கிப்போன வெள்



ளைச் சட்டையும் தந்தை பின்னிவிட்ட நேர்த்தியற்ற இரட்டைச் சடையுடன் பாடசாலையுள் புகுந்தாள். வாசலிலேயே வரவேற்பு அமோகமாய் இருந்தது.

"எடி கோபி! விலத்தடி ஊத்தை வருது.... பாரன் அதை குளிக்காம....". கலகலவெனச் சிரித்தபடி றஜி...

"அங்கபாரடி புதுச் சப்பாத்துப் போட்டிருக்கிறாள்..... அந்த வார்த்தைகள் அவளுடைய பிஞ்சு உள்ளத்தை ஈட்டியாய்த் தாக்கியது.

படிக்கப்படிக்க பிள்ளைகள் பண்பு வளரணும். ஆனா சிலது இப்படியும்.... "மிஸ் பாமாவை தள்ளி இருக்கச் சொல்லுங்கோ எனக்கு ஊத்தை பிரளப் போகுது. போடி அங்கால.... எனக்குப் பக்கத்தில இருக்காதை பாமா...."

"இங்க வா" இது மிஸ்ஸின் அதட்டல்.......

"ஏன்? அம்மா என்ன செய்யிறா... அம்மாவைக் கொண்டு குளிச்சு வெளிக்கிட்டு பின்னிவரத் தெரியாதே - பள்ளிக்கூடத்துக்கு மற்றப் பிள்ளையைப் போல வரத் தெரியாதா? பார் கோபிய.... என்ன நீற்றா இருக்கிறாள்" (ம்... அவளுக்கென்ன அவள் டொக்டரின்ற மகள் நான்.... (சிந்தனை)

எனக்கு அம்மா இல்லை எண்டதே மிஸ்சுக்கு தெரியாதா? நான் இப்ப மூணு வருசம் இவவிட்டப் படிக்கிறன்... அவள் நினைவுகள் ஓட அம்மா அந்த வார்த்தை அவள் அடி வயிற்றில் பிசைவது போன்று இருந்தது. கண்ணீர் பெருக விம்மிவிம்மி அழுதாள்.

"என்ன அழுது சமாளிக்கலாம் எண்டு பார்க்கிறாயா? நீட்டு கையை. நாளைக்கு ஒழுங்கா வா" இரண்டு பிஞ்சுக் கரங்களிலும் மாறிமாறி அடி விழுந்தது.

பாவம்.... பசி ஒருபுறம்... கவலை ஒரு புறம். இறைவன் ஏன் என்னைப் படைச்சான். மேசையின் மீது படுத்திருந்து அழுதாள். எப்போது மணியடிக்கும்? வீட்ட போகலாம் என்ற எண்ணம்தான் அவள் மனதில். வகுப்பில் நடக்கும் பாடங்கள் என்னவென்றே புரியவில்லை. வீட்டுக்குப் போய் அப்பாவின் மடியில் தலைசாய்த்து பெரிய சத்தமாக அழவேண்டும் போல் இருந்தது.

இடைவேளை மணி ஒலித்தது. எல்லோரும் சாப்பாட்டுப் பெட்டியுடன் அமர்ந்தார்கள். பாவம் அவள் காலையும் வெறும் வயிறு. ஆனால் அவளுக்கு வயிறு இருப்பதே இப்பொழுது தெரியவில்லை. கவலை எல்லாவற்றையும் நிறைத்திருந்தது.

பாடசாலை மணி அடித்தது. அடக்கி வைத்த அழுகை பீறிட, ஓட்டமும் நடையுமாய் சைக்கிள் கடைக்குச் சென்றாள். அங்கே கடைக்குள் ஒரே கூட்டம்.... ஏன்? யோசித்தவாறே ஓடினாள். சனக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே பார்த்தாள்.... கையில் சப்பாத்துடன் இரத்த வெள்ளத்தில் தந்தை.... அருகில் ரயரில் இரத்தம் தோய்ந்தபடி ஓர் இராணுவ ரக்வண்டி... கையில் இருந்த புத்தகம் சிதறியது..... இல்லை அவள் இதயமும் சிதறியது..... மயங்கிக் கீழே விழுந்தாள்.

கண் விழித்தபோது அவள் ஒரு புது உலகில் இருந்தாள். ஆம்! இப்போது அவள் தலையிலடிபட்டதால் பழைய நினைவுகளை இழந்தவளாய் வைத்தியசாலைப்படுக்கையில்...... இனி?

(யாவும் கற்பனை)

**-சி.குணபாலன்-**
*ஆசிரிய பயிற்சிக் கலாசாலை*
*கோப்பாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் தந்த பாரதி

**பாரதியின் பெற்றோரின் வாழ்க்கை வரலாறு**

இந்தியாவிலே திருநெல்வேலி ஜில்லா, சீவலப்பேரி என்ற கிராமத்தில் "கடுவாய்" சுப்பையர் என்று அழைக்கப்படும் பிராமணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் நேர்மை யிலே மிகவும் சிறந்து விளங்கினார். ஏராள மான விளைநிலங்கள், சொத்துக்கள் என இவருக்கு இருந்தன. ஆனால் சுப்பைய ருக்கு ஒரு குறை தினமும் வாட்டியது. அது என்ன குறை என்றால் நீண்டகாலமாக இவருக்குக்குழந்தையே பிறக்கவில்லை. இத னால் மனம் வருந்திய சுப்பையர் ஏழைகளுக்கு தானதருமங்கள் செய்வ தில் மும்முரமாக ஈடுபட் டார். அத்தோடு தல யாத்திரைகள், நேர்த்தி கள் என அவருடைய சொத்துக்களில் அரை வாசி கரைந்து போயின. இதன்பயனாகஇவருக்கு ஒரு பெண்ணும் ஓர் ஆணுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன. பெண்ணுக்கு குப்பம் மாள் என்றும் ஆணுக்கு சுந்தரராஜன் (சின்னச்சாமி) என்னும் பெயர் வைத்தனர். குழந்தைகள் இருவரையும் இரண்டு கண்கள் போன்று மிகவும் கவன மாக வளர்த்து வந்தனர்.



சுப்பையரின் மனைவியின் பெயர் பாகீரதி அம்மாள். இவர் பொறுமையில் பூமாதேவியை விஞ்சியவர். சுப்பையர் தவறான வழிகளில் செல்கிறார் என்பதை அறிந்தும்கூட தமது கணவரை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. இவருடைய நற்குணத்தை வர்ணிக்க வார்த்தையில்லை. இவரின் குழந் தைகள் தப்புச் செய்தால்கூட மிகவும் பொறு மையோடு அவர்களை அன்பாலே நல்ல வார்த்தைகளால் புத்திமதி கூறுவார். இத னைக் கேட்டு குழந்தைகளும் திருந்தி நடப் பார்கள். இவ்வாறு குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகின்றனர்.

சுப்பையர் அவருடைய மகள் குப்பம் மாளை "வாகைக்குளம்" எனும் ஊரில் ஒரு நல்ல கௌரவமான பிராமண குடும்பத்திலே விவாகம் செய்துகொடுத்தார். அவருடைய மகன் சின்னச்சாமி சிறுவயதில் இருந்தே கல்வி கேள்விகளில் சிறந்துவிளங்குவது கண்டு உள்ளம் மிகவும் பூரிப்படைந்து போனார். "சின்னச்சாமி ஒரு சிறந்த பண் டிதன் ஆவான்" என அவர் மனத்திலே நினைத்து அடிக்கடி அவனைப் பாராட்டு வார். ஆனால் சின்னச் சாமி உத்தியோகம் செய்வதைப் பார்க்காம லேயேசுப்பையர் இறை வனடி சேர்ந்துவிட்டார். சின்னச்சாமியும தாயா ரும் தனித்துவிட்டார்கள்.

சின்னச்சாமிக்கு தனது ஊராகிய சீவ லப்பேரியில் இருக்கப் பிடிக்கவில்லை "கல்வி கற்பதற்காக" எனக் காரணம் காட்டி எட்டய புரம் ஜமீனில் உத்தி யோகம் பார்க்க என உள்நோக்கத்துடன் தாயாரையும் அழைத் துக்கொண்டு எட்டயபுரம் எனும் ஊரில் வந்து வசிக்கலானார். எட்டயபுரத்தின் ஜமீனில் உள்ள மகாராஜா வித்துவான் களை ஆதரித்து அவர்களின் புலமையைப் பரீட்சித்து அவர்களுக்கு தகுந்தவெகுமதி அளித்து தமிழ்க்கலையை வளர்த்து வந்தார். மதுரைநகர் அந்தக் காலத்தில் தமிழ்க்கலை பண்பாட்டில் மிகவும் சிறப் பாகத் திகழ்ந்தது. அதே போன்று எட் டயபுரத்தையும் மாற்றுவதே மகாராஜாவின் குறிக்கோளாக இருந்தது. எட்டயபுரத்து ராஜ சபையில் அடிக்கடி தமிழாராய்ச்சிகளும் விவாதங்களும் அதிகமாக நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. மகாராஜா மிகுந்த கல்வி அறிவு படைத்து விளங்கினார். இதனை அறிந்த சின்னச்சாமியர் எட்டயபுரம் மகாராஜாவை காணச் சென்றார்.

மகாராஜாவிடம் தன்னை அறிமுகம் செய்துகொண்டார். முதலில் மகாராஜா இவரின் அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மிகக்கடினமான வினாக்களைக் கேட்டார். இதற்கெல்லாம் மிக எளிமையாக சின்னச்சாமி பதிலளித்தார். இதனைப் பார்த்த மகாராஜா மிகவும் வியப்படைந்து சின்னச்சாமி ஐயரை தமது அரச சபையில் வித்துவானாக ஏற்றுக்கொண்டார். அன்றையதினம் வீட்டிற்கு சென்ற சின்னச்சாமியர் தனது தாயாரின் பாதங்களை வணங்கிவிட்டு "தாயே என்னை மகாராஜா தனது சபையில் ஏற்றுக்கொண்டுவிட்டார்" என ஆனந்தக் கண்ணீர் விட்டவாறே நடந்ததை தாயாரிடம் கூறினார். இதனைக் கேட்ட தாயார் மிகவும் மகிழ்ந்து போனார். "உனது அப்பா இருந்தால் இப்போ எவ்வளவு சந்தோசம் அடைவார்" எனக் கலங்கினார். ஒருவாறு தாயைத் தேற்றிவிட்டு கோயிலுக்குச் செல்ல ஆயத்தமானார் சின்னச்சாமி.

இவ்வாறு நாள்கள் நகர்ந்து சென்றன. சின்னச்சாமியர் அரச சபையில் மிகவும் சிறந்த புலமைமிக்கவராக; பேரறிவு மிக்கவராகத் திகழ்ந்தார். இதனை அவதானித்த மகாராஜாவிற்கு சின்னச்சாமி ஐயரில் ஒரு தனிவிருப்பம் ஏற்பட்டது. அவரது கூரிய புத்தியையும் தமிழ்ப் புலமையையும் பாராட்டி தனது அரச சபையில் முதலிடம் அளித்துக் கௌரவித்தார். இதனை அவர் சின்னச்சாமி ஐயரை சபையில் முன்னிறுத்தி அறிவித்தார். இதனால் சின்னச்சாமியர் இன்ப அதிர்ச்சிக்குள்ளானார். ஆனால் ஏனையோருக்கு இந்த விடயம் மிகவும் ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

சின்னச்சாமி ஐயர் அரச சபையில் புகழ் பெற்று விளங்கியதை அறிந்த இவரது உறவினர்கள் பலர் தமது பெண்ணை சின்னச்சாமியருக்கு கட்டிவைப்பதற்கு முன்வந்தனர். ஆனால் சின்னச்சாமி ஐயர் தனது தாய் மாமன் மகளான லக்ஷ்மியை திருமணம் செய்துகொண்டார். இவரது இல்லறவாழ்வு மிகவும் இனிமையாக நடைபெற்று வந்தது. சின்னச்சாமியருக்கு எவ்வளவு நற்குணங்கள் இருந்தும் ஒரு துர்க்குணம் ஒன்று இருக்கத்தான் செய்தது. அது யாதெனின் இவருக்கு முற்கோபம் அதிகம். இந்த முற்கோபமானது அனேகமானவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது. இது மிகவும் ஆபத்தானது. இதனால் இவருடைய மனைவியோ உறவினர்களோ இவர்முன் நின்று பேசுவதற்கு நடுநடுங்குவார்கள். இவருடைய அரச செல்வாக்கினால், இவரைக்கண்டால் எல்லோரும் தலை வணங்குவார்கள். அத்தோடு இவருக்கு எட்டயபுரத்திலே மதிப்பும் மரியாதையும் மிகவும் அதிகமாகவே இருந்து வந்தது.

இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் சின்னச்சாமி ஐயரின் மனைவி கர்ப்பமடைந்தார். இதனை அறிந்த சின்னச்சாமிஐயர் மிகவும் மகிழ்ந்து போனார். தனது மனைவியை மிக அன்போடு கவனித்து வரலானார். இந்த விடயத்தை அறிந்து உறவினர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டு வாழ்த்துக்கூறிச் சென்றனர். உறவினர்களில் ஒரு மூதாட்டி லக்ஷ்மியைப் பார்த்து விட்டு "உனக்கு பிறக்கப் போவது ஒரு ஆண் குழந்தை அவன் தந்தையைப்போல புகழ் பெற்று இந்த உலகே போற்றும்படி வாழுவான்" எனக் கூறிவிட்டுச் சென்றார். இதனைக் கேட்ட சின்னச்சாமிஐயரும் மனைவியும் மிக்கமகிழ்ச்சி அடைந்தனர். குழந்தை பிறக்கும் நாளும் நெருங்கிவந்தது. வானில் மழைமேகம் சூழ்ந்திருந்தது. காற்றுப் பலமாக வீசியது. அந்த நேரம் லக்ஷ்மிக்கு பிரசவவலி ஏற்பட்டது. இதனைக் கண்ட சின்னச்சாமிஐயர் உறவினர்களை உதவிக்கு அழைத்து வரச்சென்றார்.

***(தொடரும்)***

**தொகுப்பு:- பகீரதன்**
கொழும்புத்துறை

## கணனி

இது ஒரு மின்னணுக்கருவி. கணனியை இயக்க திட்டமிடுதல் செய்யவேண்டும். திட்டங்களை உள்ளீடு சாதனம் ஏற்கின்றது. அவற்றைச் சேமிப்புப் பிரிவில் சேர்த்து வைக்கின்றது. இதை நினைவு என்பார்கள். கட்டுப்பாட்டுப் பிரிவு அவற்றைத் தொகுத்து சீராக வைத்திருக்கின்றது. கணனியில் வெளியீட்டுச் சாதனம் இருக்கின்றது. அதுதான் கண்ணாடித் திரையில் காட்டுகின்றது. சில கணனிகளில் தட்டச்சுப் பொறி இணைக்கப்பட்டிருக்கும். சிலவற்றில் அச்சடிக்கும் பொறியும் இணைக்கப்பட்டிருக்கும். கணனியில் மூன்று வகைகள் இருக்கின்றன.

*(1) எண் கணனி.* *(2) ஒத்தீட்டுக் கணனி.* *(3) கலப்புக் கணனி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தகு விஞ்ஞானிகள்

## அலெக்சாண்டர் பிளெமிங்

'பென்சிலின்' என்ற மருந்தைக் கண்டுபிடித்தவர்.

பிறந்த இடம்:- ஸ்கொட்லாந்திலுள்ள லாக்.'.பீல்டு

பிறந்த ஆண்டு:- 1881

கல்வி:- மருத்துவப்பட்டம்

சேவை:- முதலாம் உலகப் போரில் மருத்துவராகப் பணியாற்றினார்.

ஆராய்ச்சி:- காயத்தினால் ஏற்படும் தொற்றுநோய்கள் பற்றி ஆராய்ந்தார். நோய் நுண்மத்தடைமருந்துகள் பல நோய்நுண்மங்களுக்கு தீங்குசெய்வதை விட உடலின் உயிரணுக்களுக்கு பெரும் தீங்கு விளைவிப்பதைக் கண்டறிந்தார். எனவே உயிரணுக்களுக்கு தீங்கு செய்யா தடைமருந்தைக் கண்டு பிடிக்க முயற்சி மேற்கொண்டார். பூஞ்சக் காளானைச் சுற்றியிருந்த வளர்ச்சிப் பகுதியில் நோய் நுண்ணுயிர்கள் கரைந்து போயிருப்பதைக் கண்டார். நோய் நுண்ணுயிர்களுக்கு நஞ்சாக இருக்கக்கூடிய ஏதோ ஒரு பொருளை பூஞ்சக்காளான் உற்பத்தி செய்வதைக் கண்டறிந்தார். அது பலவகை நுண்ணுயிர்களின் வளர்ச்சியை தடை செய்வதைக் கண்டறிந்தார். அந்தப் பொருளுக்குப் பூஞ்சக்காளானின் பெயரைக் கொண்டே 'பென்சிலின்' எனப் பெயரிட்டார். பென்சிலின் மூலம் கோடிக் கணக்கானவர்கள் உயிர் காப்பாற்றப் பட்டு வருகின்றார்கள்.

கிடைத்த பரிசு:- நோபல் பரிசு

காலமான ஆண்டு:- 1955

**தானியத்தை விதைப்பவன் புண்ணியத்தை விதைக்கின்றான்.**

***- பாரசீகம்***

## ஆர்வில் ரைட் - வில்பர் ரைட்

விமானங்களின் அடிப்படைகளைக் கண்டறிந்தவர்கள் ரைட் சகோதரர்கள் - ஆர்வில் ரைட், வில்பர் ரைட்.

முதல் விமானம் தரையிலிருந்து 3 மீற்றர் உயரம் எழுந்து 26 மீற்றர் சென்றது. எடுத்த நேரம் 12 வினாடிகள்.

நடைபெற்ற ஆண்டு: 1903-12-17

1908 இல் பாரிசுக்கு தமது விமானத்தை எடுத்துச்சென்று கண்காட்சிக்கு வைத்தனர்.

வான்வெளிப் பயணத்திற்கு ரைட் சகோதரர்கள் வழியமைத்தனர்.

## எடிசன் தாமஸ் ஆல்வா

மின்சாரம், தொலைபேசி, கிராமபோன், திரைப்படக்கருவி போன்ற நவீன சாதனங்களைக் கண்டுபிடித்தவர்.

பிறந்தஇடம்:- அமெரிக்காவில் மிலான் என்ற ஊர்.

பிறந்த ஆண்டு:- 1847

## அலெக்சாண்டர் கிரகாம்பெல்

தொலைபேசியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி.

பிறந்தஇடம்:- ஸ்கொட்லாந்திலுள்ள எடின்பரோ.

பிறந்த ஆண்டு:- 1847

அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் குடியேறிய ஆண்டு:- 1871

தொலைபேசியைக் கண்டபிடித்த ஆண்டு:- 1875


காலமான ஆண்டு:- 1922




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வுக்கு நற்பழக்கங்கள் முக்கியம். எனவே, அருமைத்தம்பிமார்களே! தங்கைகளே! கீழேவரும் படங்களை அவதானித்துப் பாருங்கள். அவை அவசியமான பழக்கங்கள். அவற்றினை உங்கள் வாழ்வில் தவறாது கடைப்பிடியுங்கள்.


# சுகவாழ்வுக்கு



1. காலைக் கடன்கழிக்க கழிப்பறைக்குச் செல்லுங்கள.




2. பல் துலக்கவும்.



3. தினமும் குளிக்கவும்.



4. தலைமயிரைச் சுத்தம் செய்து வாரவும்.



5. உடைகளைத் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கவும்.




6. நேரத்திற்கு உணவு உண்ணவும்.



7. உணவு உட்கொண்டபின் வாய் கொப்பளிக்கவும்.




8. கைகளையும் நகங்களையும் சுத்தமாக வைத்திருக்கவும்.



9. பாடசாலைக்கு நேரத்திற்குச் செல்லவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மலேரியா ஒரு பங்கஸ்நோய் ஆகும். இதன் நோய்க்காரணி பிளாஸ்மோடியம் வைவாக்ஸ். பிளாஸ்மோடியம் பல்சிபரஸ் நோய்க்காவி அனோபிலிஸ் சாதியைச் சேர்ந்த பெண்நுளம்பு.

பரவும்விதம்: துப்புரவில்லாவிட்டால், அதாவது சுற்றுப்புறத்தை கூட்டாவிட்டால், குப்பைகளை எரிக்காவிட்டால், புற்களை செருக்காவிட்டால், நீர் தேங்கவிட்டால் நுளம்பு பெருகும். நுளம்புக்கடி மூலம் நோய் ஏற்படும்.

அறிகுறிகள்: கடுமையான குளிருடன் உடம்பு நடுங்கி காய்ச்சல் ஏற்படும். இக்காய்ச்சல் $103^0$F தொடக்கம் $105^0$F வரை காணப்படும். சிறுநீர் செம்மஞ்சளாகக் கழியும். பலவீனம் ஏற்படும்.

பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் நோய்க்காரணி காணப்படின் மூன்று நாளைக்கு ஒருமுறை காய்ச்சல் காணப்படும். பிளாஸ்மோடியம் பல்சிபரஸ் நோய்க்காரணி காணப்படின் காய்ச்சல் விட்டு விட்டுக்காயும். (முறையற்ற காய்ச்சல்)

நோய்த்தடை பாதுகாப்பு: நுளம்பு இருக்கும் இடங்களை அழித்தல்.

சிகிச்சை: குளோறோக்குயின் மருந்து நல்ல பயன்தரும்.

நோய் மாறிய பொழுதிலும் கிருமி ஈரலில் காணப்படுவதால் இந்நிலையை அழிக்க பிரேமாக்குயின் மருந்து பாவிக்கவேண்டும்.

**- ஈ.வோகேந்திரன்**
**8ஆம் தரம்**
**யாழ். இந்துக் கல்லூரி.**

# பரீட்சைக் காலம்

பரீட்சைக் காலம் வருகிறது
படிப்பில் கவனம் செலுத்திடுவோம்
விருப்புடனே நாம் படித்துவந்தால்
விடையை நன்றாய் எழுதிடலாம்.

கற்றவை மீட்டுக் கற்றிடுவோம்
காலை மாலை கற்றிடுவோம்
மற்றவை தூர விலகிவிடும்
மனதில் ஞாபகம் நிலைத்துவிடும்

பகிடிகளை நாம் குறைத்திடுவோம்
பாடங்களைச் சேர்ந்து படித்திடுவோம்
விடிவு நமக்கு வேண்டுமெனில்
விருப்புடனே நாம் கல்விகற்போம்

மூன்றாம் தவணைப் பரீட்சையிது
முழுமுச்சுடனே படித்திடுவோம்
நன்றாய் நாமும் படித்துவந்தால்
நல்ல மதிப்பெண் பெற்றிடலாம்.

-அபீர்ராஜன்-

## பாரதியார் புகழ்பாடுவோம்

பார் புகழும் பாவலனாம் - எங்கள்
பாரதியார் புகழ்பாடுவோமே.
நானிலம் போற்றும் நாயகராய் - எமக்கு
நாவினிய பாடல்கள் தந்தாரே.
மாணவர்கள் ஒன்றாகக் கூடி நின்று-
அவர்
வாழ்ந்து விட்ட வரலாற்றினைக்
கூறிடுவோமே.
காவியங்கள் படைத்து நிற்கும் - தமிழ்க்
கானக் கவிக்குயிலே போற்றி
மீண்டும் பிறப்பெடுத்து வந்து - சிறுவர்
மீதுன் கவி பரப்புவாயோ.

**- கனகலிங்கம் மகிந்தன் -**
**ஆண்டு-7**
**பரியோவான் கல்லூரி.**

கல்வியின் சாரம் மன
ஒருமைப்பாட்டிலேயே உள்ளது;
வெறுமனே பல விஷயங்களைப்
படிப்பதில் அல்ல!
*-சுவாமி விவேகானந்தர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் புத்திசாலியா?

**(சரியான விடைக்குக்கீழ் கோடு வரைக)**

1. சமைக்கும் போது பின்வரும் எந்தத் துணியில் தைக்கப்பட்ட ஆடை அணிவது பாதுகாப்பானது?
(அ)நைலோன் (ஆ)ரெறிலின் (இ)பட்டு (ஈ)பருத்தி

2. மனிதஉடலில் நீர்கூரகற்று பின்வரும் ஒன்று இல்லாமல் போவதால் ஏற்படுகின்றது. அது -
(அ)உப்பு (ஆ)நீர் (இ)உயிர்ச்சத்து (ஈ)இயக்குநீர்

3. உடலில் நோய்வருவதற்கு எதிராக பின்வருவனவற்றில் இயங்கும் ஒன்று என்ன?
(அ)உயிர்ச்சத்துக்கள் (ஆ)கரிநீரகி காபோவைதரேற்றுக்கள் (இ)சிவப்பு குருதிக் களம் (ஈ)வெள்ளை குருதிக்களம்

4. காகிதத்துண்டு ஒன்றும் கிரிக்கெட் பந்து ஒன்றும் சமநேரத்தில் சமஉயரத்திலிருந்து போடப்படுகின்றன. ஒரேசமயத்தில் அவை இரண்டும் நிலத்தைத் தொடவேண்டுமாயின் -
(அ)சமஅளவு எடை கொண்டிருத்தல் வேண்டும்.
(ஆ)சம அடர்த்தி கொண்டதாக இருக்க வேண்டும்.
(இ)காற்றொலி வெற்றிடத்தில் இருக்க வேண்டும்.
(ஈ)ஒரே மாதிரியான செறிதொகுதி கொண்டிருக்க வேண்டும்.

5. மோட்டார் வாகனத்திற்கு வெப்பாற்றும் அமைவு ஏன் தேவை?
(அ)இயந்திரத்தினைச் சூடாக்குவதற்கு
(ஆ)இயந்திரத்தினைக் குளிர்மைப்படுத்த
(இ)இயந்திரத்தினைத் தொடக்க
(ஈ)இயந்திரத்தினை நிறுத்த

6. மெய்வன்மை வீரர்களுக்கு சக்தி பிரதானமாகப் பெறுவதற்கு பிரதான மூலாதாரம் -
(அ)உயிர்ச்சத்துக்கள் (ஆ)கொழுப்பு (இ)புரதம் (ஈ)கரிநீரகி

7. மோகினி ஆட்டம் என்ற நடனமுறை எங்கிருந்து தோன்றியது?
(அ)ஒரிஸ்ஸா (ஆ)மணிப்பூர் (இ)ஆந்திரா (ஈ)கேரளம்

8. 'பஞ்சதந்திரம்' கதைகளின் ஆசிரியர்-
(அ)பாவபூதி (ஆ)ஜெய்தேவ் (இ)விஷ்ணுசர்மா (ஈ)பாரதமுனி

9. உயிர்ச்சத்து **A** உள்ள சிறந்த மூலாதாரம் -
(அ)கரற் (ஆ)உருளைக்கிழங்கு (இ)அரிசி (ஈ)தக்காளி

10. சந்திரனில் இருக்கும் மனிதனுக்கு வானம் எப்படியாகத் தெரியும்?
(அ)வெள்ளை (ஆ)கறுப்பு (இ)நீலம் (ஈ)ஒரேஞ்ச்

(விடை:- 1-ஈ, 3-ஈ, 5-ஆ, 7-ஈ, 9-ஆ
2-ஆ, 4-இ, 6-ஈ, 8-இ, 10-ஆ)

✡ 10ம் சரியென்றால் அதிபுத்திசாலி
✡ 6 முதல் 9 சரியென்றால் புத்திசாலி
5 சரியென்றால் மேலும் முயற்சி தேவை
✡ 4ம் அதற்கும் கீழே என்றால் - போதும்
✡ நித்திரை! அறிவைத் தேடுங்கள்.
✡ ஒன்றுமே இல்லையென்றால்.....முயற்சி வேண்டும். உடனே ஆரம்பிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையின்பம்

கவிதை என்றால் என்ன? கவிதையைப் பற்றிய வரையறைகள் பலவாகும். இலக்கியக் கலையின் மிகப் பண்பட்ட ஒரு வடிவமாகக் கவிதை காணப்படுகின்றது. கவிதை பற்றிய வரையறைகள் தனிப்பட்டோரின் விருப்புவெறுப்புக்களைக் கடந்து தூய நிலையில் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். எனினும் அத்தகைய வரையறைகளை உருவாக்குவது கடினமானதாகும். கவிதையின் இலக்கணம் என்று கூறுவதைவிட நல்ல கவிதை என்னபயனை விளைவிக்கும் என்று விளக்குவது இலகுவானதாகும்.

நன்னூல் ஆசிரியர் செய்யுள் என்றால் என்னவென்பதனை நன்கு விளக்கியுள்ளார்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்(கு) உடல் போல, பல
சொல்லால் பொருட்(கு) இடனாக உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

பரிபாடல் என்ற பழந்தமிழ் நூலில் கவிதை குளிர்ந்த நன்னீருக்கு ஒப்பாகப் பேசப்பட்டுள்ளது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் கவிதையை கோதாவரி நதியின் நீருடன் ஒப்பிடுகின்றான்.

"தண்ணென்று ஒழுக்கமும் தழுவிச்
சான்றோர் கவி எனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்"

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களின் கவிதைகளில் தண் என்ற கவிதையொழுக்கம் நிறைந்திருப்பதை உணரலாம். கவிதை என்றால் என்ன என்பதைக் கூறுவதைவிட கவிதை என்ன செய்கின்றது என்பதைச் சொல்லுவது சுலபமாகும். கவிதை என்ன செய்ல்களைச் செய்கின்றது.

(1) உணர்ச்சிகளை ஒலி நயமும் இசை நயமும் எழ வெளிப்படுத்துகின்றது. அச்சம், அழுகை, இழிப்பு, நகை, உவகை, மருட்கை, பெருமிதம், வெகுளி போன்ற உணர்ச்சிகளைக் கவிதை வெளிப்படுத்துகின்றது.

(2) கவிதை நம்மை மகிழ்விக்கின்றது. உதாரணமாக -

எலிக்கும் எலிக்கும் கலியாணம்
இரவிலே சுபமுகூர்த்தமாம் -

என்ற பாடலைக் கூறலாம்.

(3) கவிதை ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை கற்பனைச் சுவைபடக் கதைபோல் விளக்குகின்றது.

கள்ளன் வந்தான், கள்ளன் வந்தான்
கதவையுடைத்தான் - வீட்டுக்
கதவையுடைத்தான்
கொள்ளையிட்டென் பொருளையெல்லாம்
கொண்டு போய்விட்டான் - ஐயோ!
கொண்டு போய்விட்டான்.

வண்டு ஒன்று ஒரு ரோஜா பூவின் இதழ்களைக் கோதி, உள்ளே புகுந்து, தேனை எல்லாம் குடித்துவிட்டு ஓடிவிட, ரோஜாவானது, கள்ளன் ஒருவன் தன் வீட்டுக் கதவை உடைத்துவிட்டு ஓடிவிட்டதாகப் புலம்புவதாக வரும் கவிமணியின் பாடல் மேற்கூறிய கருத்திற்குச் சான்றாகின்றது.

(4) மனித சமுதாயத்திற்குப் பயன்படும் ஒரு மாபெரும் சிந்தனையை உருவாக்கி உலகுக்கு கவிதை வழங்குகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற கணியன் பூங்குன்றனாரின் கவிதை அற்புதமான வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறுகின்றது.

(5) கவிதையானது, புதிய சொற்றொடர்களையும் சொல்லாட்சிகளையும் உருவாக்கித் தந்து மொழிக்குப் புதியதொரு பொலிவையும் வளத்தையும் உண்டாக்குகின்றது.

(6) இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஓவியமாக்கிக் காட்டுகின்றது. உதாரணமாக -

நீலப் பொய்கைகள்! - அடடா நீல
வண்ணமொன்றில் எத்தனை வகையடி!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! கரியபெரும் பூதம்!

(7) கவிதை சாதாரணசெய்திகளை எழில் படக்காட்டுகின்றது.

பச்சடியும் தீண்டேன் பருப்பினும் கைவையேன்
கிச்சடியும் தீண்டேன் கிழங்கும் எடேன் - மெச்சு புகழ்
ஆரைப் பதியில் அவித்துக் கடைந்து வைத்த
கீரைக்கறி கிடைக்குமேல்.

(கருத்துக்கள் - டாக்டர் சு.பாலச்சந்திரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமையான செம்பு

ஒருநாட்டில் வளம் மிகுந்த கிராமம் ஒன்றிருந்தது. அந்தக் கிராமத்தில் வாழ்ந்த மக்களுக்கு எதுவித குறைபாடுகளும் இருக்கவில்லை. இதனால் அவர்கள் பெரு



மிதத்துடன் வாழ்ந்துவந்தனர். பிறரின் துன்பங்களுக்கு அவர்கள் அனுதாபம் தெரிவிப்பதில்லை. தங்கள் வசதிகளை மாத்திரம் கருத்தில் கொண்டு வாழ்ந்த அந்தக் கிராம மக்கள் துன்பத்தால் வாடும் மக்களின் குரலுக்குக்கூடச் செவிசாய்க்காமல் இருக்கப் பழகியிருந்தனர். இவ்வாறு இருக்கையில் வேறு ஊரைச் சேர்ந்த இருவர் அக்கிராமத்திற்கு வந்தனர். அவர்களில் ஒருவன் ஆறடி உயரம் கொண்டவனாகவும் பனை ஓலை போன்று வளர்ந்த தலையைக் கொண்டவனாகவும் மிகவும் சந்தோஷத்துடன் பயணம் செய்தவனாகவும் காணப்பட்டான். அவனது நண்பன் திடகாத்திரமான இளைஞனாகக் காணப்பட்டாலும் பிரயாணக்களை காரணமாகவும் முதியோருக்கு உதவும் பணிகளில் ஈடுபட்டதாலும் அவனது முகத்தில் பசிக்களை தெரிந்தது.

இந்த இருவரும் அந்தக் கிராமத்திலுள்ள பல வீடுகளுக்குச் சென்ற போதிலும் அவர்களுக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்கவில்லை. இவ்வாறு எல்லா வீடுகளுக்கும் சென்று ஏமாந்த இவர்கள் இறுதியில் ஒரு குடிசைவீட்டை வந்தடைந்தனர். அந்தக் குடிசைவீடானது அந்தக் கிராமத்திலுள்ள ஏனைய வீடுகளிலும் பார்க்கச்சிறிதாக இருந்த போதிலும் மலர்ச் செடிகளையும் பழமரங்களையும் கொண்டு அழகாக இருந்தது. அந்த வீட்டுக்காரன் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தான். அவனது மனைவி குரக்கனில் இருந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

"கனகாலத்திற்குப் பிறகு இதோ இரு விருந்தினர்கள் எங்கள் வீட்டிற்கு வருகிறார்கள். அவர்கள் களைத்திருக்கிறார்கள் போல் தெரிகிறது" என அந்த வீட்டுக்காரன் கூறினான். வீட்டுக்காரி சுளகில் இருந்த குரக்கனுடன் வீட்டுக்குள் சென்றாள்.

"வாருங்கள், வணக்கம். நெடுந்தொலைவிலிருந்து வருவதுபோல் தெரிகிறது. இங்கு தங்கி ஓய்வெடுங்கள்" என வீட்டுக்காரன் வந்த இருவரிடமும் தெரிவித்தான்.

வந்த இருவரும் "உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் எனக் கூறி இரு கதிரைகளில் அமர்ந்தனர். அவர்களது வருகை அந்த வீட்டுக்காரனுக்கும் மனைவிக்கும் மகிழ்ச்சியை அளித்தது.

சிறிது நேரத்தின் பின்னர் விருந்தினர் இருவரும் முற்றத்தில் பானைத் தண்ணீரில் முகம் கழுவினர்.

"இப்போது மாலையாகிவிட்டது. அதோ பாருங்கள். சூரியன் மறைகிறான். இப்போது புறப்பட்டீர்கள் என்றால் உங்களுக்குக் கரைச்சலாக இருக்கும். எனவே இன்று இரவு இங்கு தங்கி அதிகாலை புறப்பட்டீர்கள் என்றால் வசதியாக இருக்கும்" என வீட்டுக்காரன் வேண்டுகோள் விடுத்தான்.

வீட்டுக்காரனின் கோரிக்கையை அவர்கள் ஏற்றனர். அவர்களில் வயதில் மூத்தவன், "உங்களுக்குப் புண்ணியம் கிட்டும். இந்த ஊரில் என்ன புதினங்கள்" என வினவினான்.

"இந்த ஊர் வளம் மிக்கது. காலந்தவறாமல் மழை பெய்வதால் பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல அறுவடை கிடைக்கிறது. இங்கு நல்ல புல்வெளி இருப்பதால் கால்நடைகளுக்கு நல்ல உணவு கிடைக்கிறது. இந்த ஊரில் பல்வேறு தானியங்கள் விளைவிக்கப்படுகின்றன. சுருக்கமாகக் கூறின் மனித வாழ்க்கைக்குத்தேவையான அனைத்தும் இந்த ஊரில் கிடைக்கின்றன. இந்த ஊரில் உள்ள ஏழைக்குடும்பமான எங்கள் குடும்பத்தின் நிலைமையை வைத்தே இந்த ஊரின் செழிப்பைக் கணக்கிடலாம்" என வீட்டுக்காரன் கூறினான்.

வீட்டுக்காரன் விளக்கை ஏற்றினான். அவனது மனைவி குரக்கன் ரொட்டிகளையும் தண்ணீர் கூஜாவையும் மேசையில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு "சாப்பாடு தயார்" எனக் கூறினாள். விருந்தினர் இருவரும் மிகவும் சந்தோஷத்து டன் இரு கதிரைகளில் அமர்ந்தனர். அந்த வீட்டில் வேறு கதிரைகள் இல்லாததால் வீட்டுக்காரன் ஒரு மரப்பெட்டி மீது அமர்ந் தான்.

"எங்கள் இரவுச் சாப்பாட்டிற்கு இதைத் தான் தயாரித்துள்ளோம். குறைபடாது இந்த ஏழைகளின் உணவை உண்ணுங்கள்" என வீட்டுக்காரி கூறினாள்.

" குரக்கன் ரொட்டி சாப்பிட்டு கனநாள் கள். இன்று அது கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டம் தான்" என வயதில் மூத்த விருந்தினன் கூறினான்.

"அந்தச் செம்புக்குள் பால் இருக்கிறதா?" என்று வீட்டுக்காரன் கேட்க, வீட்டுக்காரி செம்புக்குள் பார்வையைச் செலுத்தினாள்

"கொஞ்சப் பால்தான் இருக்கிறது" எனக் கூறிய வீட்டுக்காரி வயதில் மூத்த விருந்தி னனின் பேணிக்குள் அந்தப் பாலை ஊற்றி னாள். அந்தப் பேணியை நிரப்பிய பின்னர் பார்த்தபோது செம்புக்குள் மேலும் பால் இருப்பதை வீட்டுக்காரி கவனித்தாள். எனவே வயதில் குறைந்த விருந்தினனின் பேணிக் குள் பாலை நிரப்பினாள். இப்போதும் செம்புக் குள் பால் இருப்பதைக் கண்ட வீட்டுக்காரி தனது கணவனின் பேணிக்குள்ளும் பாலை நிரப்பினாள்.

இவ்வளவு பால் செம்புக்குள் இருந்திருக் கும் என நான்நினைக்கவில்லை என வீட்டுக் காரி வியப்புற்றாள்.

"நாங்கள்கடுமையானதாகத்துடன் இருக்கி றோம். தாகத்திற்கு பால் எவ்வளவு நல்லது. இந்தப் பேணிக்குள் இன்னும் கொஞ்சம் விடுங்கோ" என வயதில் மூத்த விருந்தினன் தனது பேணியை நீட்டினான்.

பால் போதாமல் இருக்கும் என்ற சந்தே கத்துடன் வீட்டுக்காரி அந்தப் பேணிக்குள் பாலை ஊற்றினாள். இவ்வாறு விருந்தினர் கள் கேட்கக் கேட்க வீட்டுக்காரி பேணிக் குள் பாலை ஊற்றிக் கொடுத்துக் கொண்டி ருந்தாள். பலமுறை பேணிகளை நிரப்பியும் செம்புக்குள் பால் குறையாமல் இருந்ததைக் கண்ட வீட்டுக்காரி வியப்படைந்தாள்.

"கஷ்டப்பட்டவர்களுக்கு வழங்கும் பொருள்கள் ஒருபோதும் குறையமாட்டா" எனக் கூறிக்கொண்டு விருந்தினர்கள் நித்திரைக்குச் சென்றனர்.

மறுநாள் அதிகாலை விருந்தினர் இருவ ரும் தமது பயணத்திற்குத் தயாராயினர். அவர்களுடன் படலைவரை சென்று வழிய னுப்பச்சென்ற வீட்டுக்காரன் தனது முற்றத் தைப் பார்த்து வியப்படைந்து அங்கேயே நின்றான்.

அந்தக் கிராமத்தில் வீடுகள் எதனையும் காணவில்லை. வீடுகள் இருந்த இடம்யாவும் ஒரு பெரிய குளமாக மாறியிருந்தது.

"அன்பானவர்களே, நேற்று எங்களுக்கு பால்வார்த்த காரணத்தினால் உங்களது செம்பு இனி ஒருபோதும் வெறும் செம்பாக இருக்காது. இந்தக் கிராமத்திலுள்ள வீடுக ளில் இருந்த மக்கள் மிகவும் ஆடம்பரத்து டன் இருந்ததாலும் விருந்தினர்களை வர வேற்காததாலும் அவர்கள் அனைவரது வீடு களும் நீரில் மூழ்கியுள்ளன", எனக் கூறிய விருந்தினர்கள் சிரித்த முகத்துடன் பயணத் தைத் தொடர்ந்தனர்.

*சிறுவர் கதை - சிங்களத்திலிருந்து*

## உழைப்பும் உதவியும்

தேனீயை எல்லோரும் புகழுகின்றார்கள்; தேனியின் உழைப் புக்காக அல்ல. மாறாக அது அடுத்தவருக்காக உழைப்ப தால்தான். தேனீ தனக்கெனத் தேனைச் சேகரிப்பது இல்லை. பிறருக்கெனச் சேகரிக்கின்றது. உன் பதவியும் உழைப்பும் உனக்கு மாத்திரம் உதவினால் உன்னை யாரும் நினைக்க மாட்டார்கள்.

**-சேவியர் ஜோதி-**

*(நன்றி- நல்லநினைவுகள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையின் பரிசு!

ஓர் ஊரில் மிகவும் நேர்மையான சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெயர் சந்திரன். அவன் என்றுமே பொய் சொல்வதில்லை எனும் இலட்சியத்துடன் வாழ்ந்து வந்தான். அவனுடைய தந்தையார் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகி உழைக்கும் பணத்தையெல்லாம்



செலவழித்து வந்தார். இதனால் சந்திரனும் தனது படிப்பைவிட்டு கூலிவேலை செய்ய வேண்டியதாயிற்று. சந்திரனின் தந்தை அவ்வூரிலே பலபேரிடம் கடன் வாங்கியதால் அவராலே ஊரிலே நடமாட முடியவில்லை. தினமும் கடன் கொடுத்தவர்கள் சந்திரனின் வீட்டுக்கு வந்து போகத் தொடங்கினர். கடன் கொடுத்தவர்கள் வரும்போது சந்திரனின் தந்தையார் எங்காவது சென்று ஒழித்து விடுவார். இதனால் வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வர். ஒரு நாள் சந்திரன் வீட்டில் நிற்கும் போது அவ்வூர் வட்டிக் கடைக்காரர் தகப்பனாருக்குக் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக வந்து விட்டார். உரத்த குரலில் வட்டிக் கடைக்காரர் கோபத்துடன் சந்திரனைப் பார்த்து தகப்பனார் எங்கே எனக் கேட்டார். சந்திரன் உற்றே அறையைப் பார்த்தான். அங்கே ஒழிந்து நின்று கொண்டு தான் “இல்லை” எனச் சொல்லச் சொல்லி சந்திரனின் தகப்பனார் சைகை செய்தார். சந்திரன் மனம் சிந்தனை செய்தது. அவனது நாக்கு பொய் சொல்லக் கூசியது. திரும்பி வட்டிக் கடைக்காரரைப் பார்த்து பின்வருமாறு கூறினான். “ஐயா எனது தகப்பனார் உள்ளேதான் இருக்கிறார். ஆனால் அவரால் இப்போது பணத்தைக் கொடுக்க இயலாது. நீங்கள் எவ்வளவு பணம் தரவேண்டும் எனக்கூறினால் இரண்டு வாரங்களுக்குள் கூலி வேலை செய்து கொடுத்து விடுவேன்” எனப் பணிவுடன் கூறினான். வட்டிக் கடைக்காரருக்கு சந்திரனின் பணிவும், நேர்மையும், உண்மையும் மிகவும் பிடித்துவிட்டது. அவரின் கோபம் தணிந்தது. தம்பி உனது உண்மையான பேச்சும், பணிவும் எனக்குப் பிடித்துவிட்டது. எனக்கு ஓர் துணிக்கடை உள்ளது. அதிலே உனக்கு வேலை ஒன்று தருகிறேன். அங்கு உழைத்து என் பணத்தை நீ கழித்துக் கொள்ளலாம் எனக் கூறிவிட்டு சென்றுவிட்டார். பிற்காலத்தில் சந்திரனின் நேர்மைத் தன்மையை மெச்சி அவ் வட்டிக் கடைக்காரர் தனது ஒரே மகளை சந்திரனுக்கு திருமணம் செய்து கொடுத்து பெரிய துணிக்கடை ஒன்றுக்கு அவனை முதலாளி ஆக்கினார். நேர்மையாக உண்மைவழி நின்ற சந்திரன் பெரிய செல்வந்தனாக பிற் காலத்தில் திகழ்ந்தான்.

**ச.விஜயகுமார்,**
**நெல்லண்டை,**
**தும்பளை.**

◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி வைத்தியம்?

ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் நன்றாக சாப்பிட்டபடியால் உடல் பருத்துக் காணப்பட்டார். ஒரு நாள் அச்செல்வந்தரின் உதவியாளன் அவரது குடும்ப வைத்தியரை தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு "ஐயா, எங்க முதலாளி வாயைத்திறந்து கொண்டு நித்திரை செய்தபோது வாயினுள்எலிஒன்று சென்று விட்டது" எனக்கூறினார். உடனே டாக்டர் தான் காரில் வருவதாகவும் நீங்கள் அவரது வாய்க்குக்கிட்ட ரொட்டித் துண்டைப் பிடிக்கும்படியும் கூறினார். அதே போல் டாக்டர் வந்த போது செல்வந்தரின் உதவியாள் வாய்க்கு அருகில் மீன்துண்டொன்றைப் பிடித்துக் கொண்டிருந்தார். உடனே டாக்டர் கேட்டார் "நான் ரொட்டித் துண்டைத்தானே பிடிக்கச் சொன்னேன். நீங்கள் ஏன் மீன் துண்டைப் பிடித்திருக்கிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு உதவியாளர் கூறினார். "டாக்டர் உள்ளே போன எலி வந்து விட்டது. ஆனால் எலியைக் கலைத்துக்கொண்டு வாய்க்குள் போன பூனை இன்னும் வந்து சேரவில்லை. அதனால் தான் மீனைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.




-சி.பாலதயாகரன்-
புன்னாலைக்கட்டுவன்.

# அட! இப்படியுமா?

ஒரு கிராமத்தில் ஆடம்பரத்தில் விருப்பம் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் பகட்டாக வெளிக்கிட்டு அந்தக் கிராமத்தின் தெருவழியே திரிவான். ஆனால் அக்கிராம மக்கள் அவனது பகட்டைக் கவனிப்பது இல்லை. அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை.

தனது பகட்டைக் கிராம மக்கள் கவனிக்காமல் இருப்பது அவனுக்குக் கவலையைஅளித்தது. தனது பகட்டைமேலும் அதிகரிக்கச் செய்வதற்காக புதிதாகத் தங்கமோதிரம் ஒன்றை வாங்கி அணிந்தான். அவன் புதிதாக மோதிரம் அணிந்திருப்பதை யாரும் கவனிக்கவில்லை. அதுபற்றியும் விசாரிக்கவில்லை.



"இன்று மழை வரும்போல் இருக்கிறது. வானத்தைப் பாருங்கள்" என மோதிர விரலால் சுட்டிக்காட்டியும் எவரும் மோதிரம் பற்றி விசாரிக்கவில்லை. இதுமேலும் அவனுக்குக் கவலையைக் கொடுத்தது.

தான் மோதிரம் அணிந்திருப்பதைக் காட்டுவதற்கு அவன் பல்வேறு முயற்சிகள் எடுத்த போதும் எவரும் மோதிரம் பற்றி விசாரிக்கவில்லை.

இரவானதும் அவன் தனது வைக்கோல் பட்டறையைக் கொழுத்திவிட்டான். தீப்பற்றி எரிவதைக் கண்ட கிராம மக்கள் அங்கு ஓடிவந்தனர்.

"தண்ணீரைக் கொண்டு வாருங்கள். மணலை அள்ளி வீசுங்கள்" என தனது மோதிர விரலால் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தான்.

அப்போது கிராமத்தவன் ஒருவன் அந்த மோதிரத்தைக் கவனித்துவிட்டான்.

"இந்த மோதிரம் உங்களுக்கு மிகவும் அழகாக இருக்கிறது. விலை மிகவும் அதிகமாய் இருக்குமே" என விசாரித்தான்.

கிராமத்தவன் விசாரித்தது ஆடம்பரத்தில் விருப்பம் கொண்டவனுக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.


"இந்த மோதிரத்தைப் பற்றி இன்று பகல் விசாரித்திருக்கலாமே. அப்படி விசாரித்திருந்தால் இந்த வைக்கோல்பட்டறை எரிந்திருக்காதே" என அவன் பதிலளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறந்தது எது?



"உலகில் சிறந்தது எது?" வென
ஊரில் இருவர் மண்டையை
உடைத்துக் கொண்ட போதிலும்
ஒன்றும் புரியவில்லையே!

மெத்தப் படித்த ஒருவரை
மேலும் நாடிச் சென்றனர்;
"உலகில் சிறந்தது எதுவென
உரைப்பீர்?" என்றே வினவினர்.

மெத்தப்படித்த அவருமே
மீசை தன்னை முறுக்கினார்!
புத்தகங்கள் யாவையும்
புரட்டிப் புரட்டிப் பார்த்தனர்!

"உலகில் சிறந்தது எது?" வெனும்
உண்மை விளங்க வில்லையே!
அலசி அலசிப் பார்த்துமே
அடைய வில்லை விடையினை!

வந்த இரண்டு பேருமே
வாடிச் சோர்ந்த போதிலே
அங்கு குமரன் வந்தனன்;
அருமைத் தந்தை அருகிலே!

அன்பு உலகில் சிறந்தது;
அறிவு உலகில் சிறந்தது;
பண்பு உலகில் சிறந்தது;
பாரில் உழைப்பு சிறந்தது!

என்ற சிறுவன் விடையிலே
இன்பம் கொண்ட இருவரும்
அந்தச் சிறுவன் தன்னையே
அள்ளி அணைத்துக் கொண்டனர்.

**-எஸ்.விஜயலட்சுமி**

## ஏழும் ஏழும் பதினாலாம்

ஏழும் ஏழும் பதினாலாம்
எலியாருக்கு முழம் வாலாம்.

அறைக்குள் எலியார் புகுந்தாராம்
அங்கும் இங்கும் பார்த்தாராம்.

இரண்டு தட்டில் பணியாரம்
இருந்தது கண்டு மகிழ்ந்தாராம்.

கடித்துக் கடித்துத் தின்றாராம்
கணக்கைக் கூட்டிப் பார்த்தாராம்.

ஏழும் ஏழும் பதினாலாம்
எலியார் ஏப்பம் விட்டாராம்!

**-குழந்தைக் கவிஞர்
டாக்டர் அழ.வள்ளியப்பா.**

## அம்மா எங்கள் தெய்வம்

அம்மா எங்கள் தெய்வம்
அன்பின் வடிவாம் அம்மா
அம்மா எங்கள் தெய்வம்
அமுதின் உருவாம் அம்மா

கண்ணிற் கண்ட தெய்வம்
கவலை போக்கும் தெய்வம்
மண்ணிற் கண்ட தெய்வம்
மதிக்கும் அம்மா தெய்வம்.

**-நன்றி: பண்டிதர்.சி.கார்த்திகேசு
(சேந்தன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல பையன்



அம்மா அப்பா சொன்ன சொல்லை
அன்பாய்க் கேட்டு நடப்பேன்
சும்மா சேட்டை செய்தே தெருவைச்
சுற்றித் திரிய மாட்டேன்

பள்ளி தினமும் சென்றே யங்கு
பாடம் நன்கு படிப்பேன்
கள்ளம் போட்டு நின்றே உயர்
கல்வியை இழந்து நிற்கேன்

முதியோர் தம்மை போற்றிடுவேன்
முன்னேற்றப் பாதையில் சென்றிடுவேன்
முதியோர் தம்மை இகழ்ந்தொதுக்கும்
மூடனாக மாட்டேன்

வள்ளுவன் சொன்ன குறள்மொழியை
வாய்ப்பாடாய் நான் படிப்பேன்
ஔவை சொன்ன பாடல்களை
ஔவியமாகக் கொண்டிடுவேன்

உள்ளம் எங்கும் உவகையுடன் இவ்
உலகில் நன்கே வாழ்திடுவேன்
நல்லபையன் என்றே யென்னை
உலகம் போற்ற மகிழ்திடுவேன்.

-நா.காயத்திரி
(கொ.து.வி)

# தமிழா! உனை மறவேன்!

விண்ணும் மண்ணும எதிர்த்தாலும்
விளங்கும் இறைவன் மறந்தாலும்
எண்ணில் லாத துன்பமெல்லாம்
என்னை வாட்டி வதைத்தாலும்
கன்னித் தமிழே என்கருத்தைக்
கவர்ந்த உன்தன் நற்காதல்
எண்ணம் மட்டும் எந்நாளும்
என்னில் வாழும் அறிவாயே!

அலைகள் பொங்கும் கடலினிலே
அடியேன் தன்னை உலகோர்கள்
விலையில் லாத வீணனென
வீசு கின்ற வேளையிலும்
அழியா நினைவு என்கின்ற
அற்புதத் தன்மை யாலென்றும்
களிதான் சேர்க்குந் தமிழேயுன்
காதல் மறவேன் நானம்மா!

## பணிவு

நிறைந்த முதிர்வில்
பணிவது பெருமை -
நெற்கதிர்கள்!

## கனமானால்

காலையில் தலைக்கனம் கொண்ட புல்
மாலையில்
மாட்டின் உணவாய்...........

## நட்சத்திரங்கள்

பகல் நாடகம் முடிந்தது;
இருள் திரை விழுந்தது.
யாரது ஓட்டைகள் வழியே பார்ப்பது?

## போதனை

வாத்தியார் கையில் பிரம்பு கல்வி
வாய் வழி மட்டு மல்ல.

-நன்றி: அமுதபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் க. வேந்தனார்

ஈழத்திலே தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர் வேந்தனார். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவரை "தனித்தமிழ்வேந்தனாக" "சைவத்தமிழ்ப் பெருவேந்தனாக" போற்றியுள்ளார்.

பிறந்தநாள்: 5-11-1918

இயற்பெயர்: நாகேந்திரம்பிள்ளை

படித்த பாடசாலை: வேலணை சைவப்பிரகாசவித்தியாசாலை, சரஸ்வதி வித்தியாசாலை.

படிப்பித்த கல்லூரி: யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி (1946 முதல் 1966 வரை)

பெற்ற சில பட்டங்கள்: வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், பயிற்றப்பட்ட தமிழாசிரியர், சித்தாந்த சிரோமணி.

அவர் எழுதிய சில நூல்கள்: யாழ்ப்பாணத்துத் திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும், கவிதைப் பூம்பொழில், இந்துசமயம், பாரதியார் பாடல்கள்.

அவர் இயற்றிய "நொண்டி" பாடல்-

காலில் லாத நொண்டி மிகவும்
களைத்துப் போனாள் அம்மா
கோலை ஊன்றி நடந்து முதுகு
கூனிப் போனாள் அம்மா.

பாவம் அந்த நொண்டி எங்கள்
பள்ளிக் கூடத் தெருவால்
போகும்போது கண்டேன் ஐயோ
புண்கள் காலில் அம்மா.

இனிப்புக் கடலை வாங்கக் காசு
இனிமேல் கேட்க மாட்டேன்
தனித்த நொண்டி தவிப்பைப் போக்கத்
தாரும் அம்மா காசு.

(ஊனமுற்றவனைக் கண்டு சின்னக் குழந்தை துடிப்பதுபோல் எழுதியுள்ளார்)

**புள்ளிக்கோழி:**

காற்றுக் கிளைகள் ஆடினாலும்
காதைக் கொடுத்துக் கேட்கும்
சோற்றைப் போட்டால் குஞ்சைக் கூவிச்
சொண்டால் கிளறிக் காட்டும்.

**வெண்ணிலா:**

கலாதம்பி காந்தி யோடு
கையைக் கோர்த்துக் கொண்டு
நிலாநிலா என்று கூவி
நின்று துள்ளும் வெண்ணிலா.

**கூட்டாளி:**

பவளம் எந்தன் கூட்டாளி
பள்ளிக் கூடக் கூட்டாளி
அவளும் நானும் எப்போதும்
அன்பாய்க் கூடிச் செல்லுவோம்.

**கரும்பு:**

கரும்பு தின்போம் கரும்பு தின்போம்
கரும்பு தின்போம் நாங்கள்
கடித்துக் கடித்து இனிக்க இனிக்கக்
கரும்பு தின்போம் நாங்கள்.

**செந்தமிழைக் கற்ற இடம்:**

உள்ளம் உவகையுற ஊக்கமுடன் வீற்றிருந்து
அள்ளுசுவைத் தேனை ஆர்ந்திடல்போல் - விள்ளுஞ்சீர்
தெய்வமார் செந்தமிழைத் தேர்ந்து நான் கற்றவிடம்
ஐயனார் கோவிலடி ஆல்.

**யார் கவிஞன்?**

பாடுகின்றோர் எல்லோரும் கவிஞரல்லர்
பாட்டென்றாற் பண்டிதர்க்கே உரிமை -யல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப் பெருக்கே -போல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த ஒளியால் -ஓங்கி
வாடுகின்ற மக்களினம் மகிழ்ச்சிகொள்ள
மறுமலர்ச்சிப் வெருவாழ்வை வழங்கு -மாற்றல்
கூடுகின்ற கொள்கையினால் எழுச்சி -கொண்டு
குமுறுகின்ற கோளரியே கவிஞனாவான்.

**இழிவு:**


கங்கையைக் கொண்டா ரென்றும்
கடாரத்தை வென்றா ரென்றும்
இங்கு நாம் பழைமை பேசி
எடுத்திடும் பயனொன் றில்லை
அங்கையோ டங்கை கூப்பி
அடிமைசெய் கூலி யாக
எங்குபோய்த் தமிழர் வாழும்
இழிவினைப் போக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிறே தஞ்சம்

ஒரு நாள் மனிதனின் வயிற்றுக்கும் ஏனைய உறுப்புக்களுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் மூண்டது.



"நாங்கள் எப்போதும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஒருநாளில் ஒருநிமிடம் கூட எமக்கு ஆறுதல் இல்லை" எனக் கைகள் சொல்லின.

"உண்மையே. ஏன் நாங்கள் மைல் கணக்காக நடக்கவேண்டும். அதுவும் மனிதனின் உடலைச் சுமந்துகொண்டு. ஆனால் வயிறு இத்தகைய வேலைகள் எவற்றையும் செய்வதில்லை" - இது கால்களின் வாதம்.

"நான் எவற்றை எல்லாம் பார்க்கிறேன்; கேட்கிறேன்; சிந்திக்கிறேன். இந்த சோம்பேறி வயிற்றால் எதையாவது சிந்திக்க முடிகிறதா? பார்க்க முடிகிறதா? கேட்க முடிகிறதா?" இது தலையின் வாதம்.

இந்தச் சோம்பேறியான எதிரியை (வயிற்றை) புறக்கணிப்பது என ஒருநாள் ஏனைய உறுப்புகள் தீர்மானித்தன.

மனிதனின் உடலைச் சுமக்கப் பாதங்கள் மறுத்தன. கைகள் எதையும் தயாரிக்க மறுத்தன. ஏதாவது கிடைத்தாலும் வாய் திறக்க மறுத்தது.

இவ்வாறு தாங்கள் செயற்பட மறுத்தன் மூலம் வயிற்றைப் பழிதீர்ப்பதூன அவை முடிவுஎடுத்தன. வயிற்றுக்கு எதுவும் கிடைக்காது போகவே பட்டினி காரணமாகஏனைய பாகங்கள் சோர்வுற்றன. நோய்கள் அவற்றைப்பீடிக்கத்தொடங்கின. எனவே ஏனைய பாகங்கள் தமது வேலை நிறுத்தங்களைக் கைவிட்டன. எல்லாவற்றிலும் வயிறே மிகவும் முக்கியமான; பயனுள்ள பாகம் என்பதை ஏற்றுக்கொண்டன.

◆

## வெள்ளை யானை

ஆங்கிலத்தில் "WHITE ELEPHANT" என்னும் பதம் ஒன்றுள்ளது. இதையே தமிழில் வெள்ளையானை எனக்கூறுகிறோம்.

சமாளிக்க முடியாத பெருந்தொகையை வீணே செலவிடுவதை வெள்ளையானை எனக்கூறுகிறோம்.

இந்த வெள்ளை யானை (WHITE ELEPHANT) என்ற ஆங்கிலப் பதம் உருவானதற்கான காரணம் என்ன தெரியுமா?

பர்மாநாட்டில் (மியன்மார்) அடர்ந்த காடுகளில் அபூர்வமாக வெள்ளை நிறத்தாலான யானைகள் கிடைக்கும். அந்த யானைகளை அந்நாட்டு மக்கள் தெய்வமாகக் கருதி பயபக்தியுடன் வழிபடுவர். அவற்றிற்கு எதுவித வேலைகளும் கொடுக்கப்படுவதில்லை. யானைகளை வளர்ப்பதென்பது இலகுவான விடயமல்ல. அவற்றைக் கட்டி வைத்து பெருமளவிலான உணவுகளை வழங்கவேண்டும். அதாவது எதுவித வருமானமும்இன்றி பெருஞ்செலவை மேற்கொள்ள வேண்டும். இக்காரணத்தினால்தான் சமாளிக்க முடியாத பெருந்தொகைப் பணத்தை வீணே செலவிடுவதற்கு WHITE ELEPHANT (வெள்ளை யானை) என்ற பதம் உருவானது.

தேவலோகத்தின் அதிபதியான இந்திரனிடம் வெள்ளையானை இருந்ததாக புராணங்கள் தெரிவிக்கின்றன. அதற்கும் WHITE ELEPHANT என்ற பதத்திற்கும் தொடர்பில்லை.

◆


**பல்லிகள் பற்றி...**

*பல்லிகள் ஊர்வன வகுப்பைச் சேர்ந்தவை. பல்லிகளில் ஏறத்தாழ 3000 வகைகள் உள்ளன. உலகிலேயே மிகப்பெரிய பல்லிகள் இந்தோனேசியாவில் உள்ளது. பல்லிகள் பொதுவாக மூன்று ஆண்டுகள் வரை வாழ்கின்றன. பல்லிகள் ஆபத்து இல்லாதவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது வகுப்பாசிரியை



எனது வகுப்பாசிரியையின் பெயர் திலகம். இவர் மாணவர்கள் ஆகிய எம்முடன் மிகவும் அன்பாகப்பழகுவார். இனிமையாகக் கதைப்பார். இவருக்கு கோபம் வந்ததை நாங்கள் கண்டதில்லை. எங்களோடு தாயாகவும், சகோதிரியாகவும், தோழியைப் போலவும் பழகுவார். அதனால் நாம் அவருடன் நெருங்கிப்பழகுவோம். அவரது தாய் தந்தையர் மிகவும் செல்வம்படைத்தவர்கள். ஆனால் அவர் மிகவும் எளிமையாகவே வாழ்ந்து வருகிறார். தனது பொழுதின் பெரும்பகுதியைப் பாடசாலை வேலைகளிலேயே செலவு செய்தார்.

அதனால் அதிபர்கூட இவரை நன்கு மதிக்கின்றார். சில ஆசிரியர்கள் தாம் படித்தவர்கள், பெரியவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற நினைவு கொண்டவர்களாக நடமாடுகின்றனர். மாணவர்களாகிய எம்மை மிகக் கண்டிப்பாக நடத்துவார்கள். ஆனால் திலகம் ஆசிரியை எமது வகுப்பு மாணவரை மட்டுமன்றி பாடசாலையில் கற்கும் ஏனைய மாணவர்களின் நலன்களிலும் அக்கறை காட்டுபவர். இதனால் இவருடன் பாடசாலையில் கற்கும் சகல மாணவரும் பணிவும் அன்பும் உடையவர்களாக நடந்து வருகின்றனர். அன்புடையார் என்னும் பிறர்க்குடையார் என அடிக்கடி கூறுவார். ஆசிரியை எமக்கு கற்பிக்கும் வேளைகளில் எமது செயற்பாடுகளை மிக உன்னிப்பாகக் கவனிப்பார்.

குறைகளைக் கண்டறிந்து தனித்தனியாகத் திருத்தம் செய்வார். அடிக்கடி எமது பெற்றோரை அழைத்து எமது குறை நிறைகளை உரையாடுவார். நாம் சில நாட்கள் பாடசாலை செல்லாவிட்டால் வீடு வந்து எம்மைப் பார்வையிடுவார். வகுப்பில் சோர்வுற்று இருக்கும் மாணவரை தனியாக அழைத்து அன்புடன் விசாரித்து பிறர் அறியாதவாறு அவர்களின் குறைகளைப் போக்கி வைப்பார். நாம் நோயுற்று பாடசாலை செல்லாத வேளையில் எமது வீட்டுக்கு வருகை தந்து தெம்புகூறுவார். அன்பளிப்புக்களும் தருவார். இவர் வேதனத்துக்காக ஆசிரியர்த்தொழில் செய்பவரல்ல. தொண்டெனக்கருதி ஆசிரியராக கடமைபுரிகின்றார். இவரது மனப்பாங்கைப் பார்க்கும் போது இவரை நம் நாட்டு அன்னை திரேசா என்று அழைக்கலாம் எனத் தோன்றுகிறது.

~க.ய[illegible]மின்

**அன்புக்கு உற்பத்தி ஸ்தானம் அன்னை.**
**- ஆபிரிக்கா**

---

# மழை நீரின் மாயா ஜாலங்கள்

மழை பெய்யும்போது அதைப் பார்த்துக்கொண்டிருப்பதில் எவ்வளவு ஆனந்தம். அதிலும் மழை பெய்து கொண்டிருக்கும்போது சூரிய ஒளியும் இருக்குமானால் கேட்கவும் வேண்டுமா?

மழை பெய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் ஏதோ மாயாஜாலம் நிகழ்வதாக எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையும் அதுவே.

மழைத்துளிகள் வானிலிருந்து பூமியை அடைவதற்கு முன்னர் பலவித உருவங்களை எடுப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஒரு விநாடியில் ஒரு மழைத்துளி பதின்நான்கு உருவங்களை அடைவதாக வேகமாக இயங்கும் கமெராக்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் அறிய முடிவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு காவியம்

கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தின் போது கவிஞர் கண்ணதாசன் இயற்றிய இயேசு காவியம் என்ற நூலில் இருந்து சில பகுதிகளைத் தருவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

**(1) வர இருந்தவர் வருகிறார் -**



ஆயர்மக்களே! ஆயர்மக்களே!
அருள்மொழி வல்ல திருஅவதாரன்
பாவங்கள் நீக்கும் தேவகு மாரன்
கைத்துணி ஒன்றில் கண்களைத் திறந்து
ஆ நிரைத் தொழுவில் அவதரித் துள்ளான்!
(வானில் தூதன் வளம் பெறத்தோன்றி ஆயர் மக்களை அழைத்தான்)

**(2) பரிசுத்த ஆவி இறங்கிவந்தது -**



பறக்கும் புறாப்போல் பரிசுத்த ஆவி
இறங்கி வருவதை இயேசுவே கண்டார்!
ஓங்கும் வானிலே ஒரொலி கேட்டது:
"இவரே நமது இனிய குமாரர்
இவரிடம் நானே எனையே காண்கிறேன்
பொங்கும் மகிழ்வில் பூரிப்படைகிறேன்!"

**(3) ஐயன் திருமகிமை -**



அண்ணலின் வார்த்தைகளைக் - கேட்க
ஆயிரம் ஆயிரமாய்
நண்ணிவந் தார்மாந்தர் - அவர்க்கு
நல்லன சொல்லிவைத்தார்!

பட்டிகள் தொட்டிகளில் - இருந்து
பார்த்திட வந்தமக்கள்
பட்டினி கிடப்பார்கள் - அவர்கள்
பசியினைத் தீர்ப்பதெங்கே?

.................................................................

"தேடுங்கள் உணவினையே - பசியைத் தீருங்கள்," என்றுரைத்தார்.

"ஐந்தே அப்பம் உண்டு - மீன்கள் அளவினில் இரண்டு உண்டு" - என்றனர் சீடர்கள்.
"இருப்பதைக் கொடுங்கள்" என்றார் இயேசு.


தன்முன் நின்றவரைப் - பசும்புல்
தரையினில் அமரவைத்தார்
விண்ணகம் தனைநோக்கி - அதனை
விருந்தினிலே படைத்தார்!

ஐயாயி ரம்பேர்க்கு - அப்பம்
அளவினில் பெருகியதே!
ஐயன் திருமகிமை - மக்கள்
அரங்கத்தில் உருகியதே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(4) கடலினில் நடந்தார்...**



நடுக்கடல் தன்னில் நடுங்கிய படியே
சீடரது படகு ஆடிக்கிடந்தது!
இயேசுவை நினைத்தவர் ஏங்கிய போது
கடலின் மேலொரு காலடி தெரிந்தது!
ஆழக் கடலின் அலைகளின் மீது
வேழ நடையொடு விந்தை மனிதர்
பூமியில் நடப்பது போல நடந்தார்!

**(5) இறந்த லாசர் உயிர்த்த புதுமை.....**



பெத்தானியா என்ற ஊரில் மார்த்தாள், மரியாள் என்று இருசகோதரிகள் இருந்தனர். அவர்கள் இயேசுவை என்றும் நினைப்பவர்கள். அவர்களது அன்புச் சகோதரன் லாசர் இறந்துவிட்டான். இறந்த செய்தி கேட்டு இயேசு வந்தார்.
"லாசரே எழுந்து நலமுடன் வருக!" என்று மன்னர்கள் இடும் கட்டளைபோல் உரைத்தார் இயேசு; உயிர்த்தான் லாசர்!

**(6) நற்கருணையை நிறுவுகிறார்.....**



தன்கையால் அப்பத்தை எடுத்துத் தந்தை
தனைத்தொழுது கூறாகப் பிட்டு வைத்து
"என்கையில் உள்ளது என் உடலம்
-தந்தேன்
எல்லோரும் உண்ணுங்கள்" என்று
-உரைத்தார்!
தன்கையில் சீடரெல்லாம் வாங்கிக் கொள்ள
திராட்சைரசக் கிண்ணத்தை தந்த இயேசு
"என்கையில் உள்ளதுஎன் இரத்தம்" என்றார்
"எல்லோரும் பருகுங்கள்" என்றுரைத்தார்!

**(7) எல்லாம் நிறைவேறிற்று....**



"அன்புத்தந்தையே! அன்புத்தந்தையே
ஆத்மா வைகள் அன்புக் கரங்களில்
இப்பொழு தேநான் ஒப்படைக் கின்றேன்!"
என்றார் இயேசு. சென்றது உயிரே!

**(8) விண்ணேற்றம்.....**




மந்திரமேகம் சந்தடி செய்து
மங்கல இசைபாட
ஆநிரை மந்தை ஆடுகள் எல்லாம்
ஆயனைக் கொண்டாட
அந்தர மீதில் சென்று நடந்தார்
தந்தையைக் கண்டாட!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து அறிஞர் வரிசை - II
# தனிநாயகம் அடிகளார்



இயற்பெயர்: சேவியர் நிக்கோலஸ் ஸ்ரான்சிலஸ்.

பின்னர் நிலவியபெயர்: சேவியர் ஸ்ரான்சிலஸ் தனிநாயகம்.

பிறந்த திகதி: 2ஆம் நாள் - ஆகஸ்ட் - 1913

பிறந்த இடம்: ஊர்காவற்றுறை.

பெற்றோர் பெயர்: நாகநாதன் ஸ்ரான்சிலஸ் சிசிலியா (பஸ்தியாம்பிள்ளை)

இறந்த நாள்: 01 - 09 - 1980

தனிநாயகம் தன்னுடைய ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி என்பவற்றை யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் பெற்றார். அவருடைய அன்பிற்குரிய அன்னையார் அவரது பன்னிரண்டாம் வயதிலே மரணமடைந்துவிட்டார். பாடசாலையே அவரது இல்லமானது. பாடசாலையில் நிலவிய மிஷனரிமாரின் சூழல் அவரது வாழ்வில் பெரும் நன்மையைச் செய்தது.

பாடசாலையில் ஆங்கிலம் தான் போதனா மொழியாக இருந்தது. மக்காலே என்ற அறிஞன் ஆங்கிலக்கல்வி பற்றிக் கூறியது கவனிக்கத்தக்கது. மாணவர்களை "சுவையுணர்வு, அபிப்பிராயம், ஒழுக்கமுடமை, அறிவாற்றல் என்பவற்றில் ஆங்கிலேயத் தன்மையுடையோராக" உருவாக்குவதுதான் கல்விமுறையின் நோக்கமாக இருந்தது. தமிழ் கற்பித்தல் அலட்சியம் செய்யப்பட்டது. மிகவும் சிறப்பான வசதிகள் ஆங்கிலத்திற்கு வழங்கப்பட்டது. தனிநாயகம் ஆங்கிலத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றார். பேச்சுப் போட்டிகளில் தங்கப்பதக்கங்களை வென்றார். வருடாந்த பரிசு விழாக்களில் தவறாது பரிசுகள் பெற்றார். அது மாத்திரமா? பாடசாலையின் சஞ்சிகையின் THE BOTTLED SUNSHINE ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இடைநிலைக்கல்வியை முடித்தவுடன் தன்னை இயேசு பணிக்கு அர்ப்பணித்தார். 1931ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள செனற். பெனாட் செமினரியில் சேர்ந்தார். இங்கு தனது கல்வியை மிகச்சிறப்பாக முடித்தார். இதன்பின் ரோமாபுரியிலுள்ள புகழ்வாய்ந்த புரபகண்டா பைடே குருத்துவக்கல்லூரியில் சேர்ந்தார். இப்பாடசாலையில் அனுமதிபெற்ற முதலாவது இலங்கைத் தமிழன் என்ற பெருமையையும் பெற்றார். இக் கல்லூரியில் ஐந்து வருடங்கள் பயிற்சி பெற்றார்.

தூத்துக் குடியிலுள்ள தெராசா உயர் நிலைப்பள்ளியில் ஐந்து வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். மாணவர்களுக்காக 'சிறுமலர்' என்ற சஞ்சிகையை வெளியிட்டார். 1045ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். தமிழ் மொழி, இலக்கியம் என்பவற்றில் பட்டப்பின் படிப்பு கற்கைநெறியில் சேர்ந்தார். பேராசிரியர் மீனாட்சிசுந்தரனாரின் மாணவனாகினார். இங்கு அவர் முதுமாணிப் பட்டம் பெற்றார். 1952ஆம் ஆண்டு இலங்கை திரும்பினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். தமிழர் தம் நல்வாழ்விற்கு தன்னையே அர்ப்பணித்தார். 1960ஆம் ஆண்டு மலேசியா பல்கலைக் கழகத்தில் இணைந்தார்.

இவர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் பல. பல்வேறு நாடுகளில் தமிழரின் கலாசாரம் பற்றி விரிவுரைகள் நடத்தினார். "தமிழ் கலாசாரம்" என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் அற்புதமானவை. 1964ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் நாள் புதுடில்லியில் வித்தியாபவனில் தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவர் இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். 1966ஆம் ஆண்டு வரலாற்றுப் புகழ் வாய்ந்த முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு கூடியது. இந்த மாநாடு கோலாலம்பூரில் 1966ஆம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் 23ஆம் திகதி வரை நடைபெற்றது.

பேராசிரியர் எலியேசர் இவரைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது. மொழிகளை ஒப்பு நோக்கிய தனிநாயகம் அடிகள் பின்வருமாறு கூறினார் என்று எலியேசர் எழுதியுள்ளார்:

"சட்டத்தின் மொழி இலத்தீன் என்றால்,
இராசதந்திரத்தின் மொழி பிரெஞ்சு என்றால்,
விஞ்ஞானத்தின் மொழி ஜெர்மன் என்றால்,
வர்த்தகத்தின் மொழி ஆங்கிலம் என்றால்,
பக்தியின் மொழி தமிழ்."

தமிழ் ஆராய்ச்சிக்கான சர்வதேச சங்கத்தினை உருவாக்கிய பெருமையுடையவர். இவருடன் இணைந்து செயலாற்றியவர் ஐரோப்பிய பேராசிரியர் காமில்வெலிபில். இவர்களின் பெருமுயற்சியினால்தான் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றன. இரண்டாவது மாநாடு சென்னையில் 1968ஆம் ஆண்டுதைமாதம் நடைபெற்றது. மூன்றாவது மாநாடு பாரிஸ் நகரில் 1970ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்றது. நான்காவது மாநாடு 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்.நகர பிதாக்கள் அவருக்கு பெரும் வரவேற்பளித்தது குறிப்பிடத்தக்கது. 1981ஆம் ஆண்டு தை மாதம் மதுரையில் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. இறந்த பின்னர் தரும்மாபெரும் கௌரவம் அப்போது அவருக்கு வழங்கப்பட்டது.1981ஆம் ஆண்டுயாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் இறந்தபின் வழங்கும் 'கலாநிதி'ப் பட்டத்தை அவருக்கு வழங்கியது.

◆

# விடுகதைக்கு விடை சொல்ல முடியுமா?

1. அக்கனியும், இக்கனியும், முக்கனியும் சர்க்கரையும் சேர்த்து வைத்த அமிர்தம் அது என்ன?
2. ஆட்டி விட்டால் ஆடும் அந்தரத்தில் தொங்கும் அது என்ன?
3. ஆளில்லாத வீட்டில் இவன் தான் கண்ணில் படுவான் அவன் யார்?
4. ஆயிரம் கதைகள் சொல்கிறவன் ஆயிரம் கவிதைகள் எழுதுவான் வெள்ளைத் தாளிலே நாட்டியமாடி வேண்டிய ஞானம் கொடுப்பான் அவன் யார்?
5. ஆறடி மனிதன் ஆட்டத்தைக் கண்டிட அரை அடி இடத்தில் அமைந்துள்ள கோடுகள் அவை எவை?
6. ஆகாரத்திலும் ஆகாராம் அது என்ன ஆகாரம்?
7. ஒற்றைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை அது என்ன?
8. பரந்த வெளியிலே ரோஜாப்பூ கொட்டிக் கிடக்கிறது எடுக்க எவரும் இல்லை அது என்ன?
9. தலையுண்டு வாலில்லை உடலுண்டு கையில்லை அது என்ன?
10. ஆயிரம் பேர் அணி வகுப்பு ஆனாலும் தூசி கிளம்பாது?

## விடைகள்

(1) பஞ்சாமிர்தம்
(2) ஊஞ்சல்
(3) பூட்டு
(4) பேனா
(5) கைரேகை
(6) நீராகாரம்
(7) வெண்டிக்காய்
(8) நட்சத்திரம்
(9) தீக்குச்சி
(10) எறும்புக்கூட்டம்

**தொகுத்தவர்:- வை.அபர்ணா**
**கொக்குவில் இந்துக்கல்லூரி.**

**வெளவால் பறவை இனமா?**

*வெளவால்கள் நன்றாகப் பறப்பவை. ஆனால் அவை பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவை. அவை குட்டி போட்டு பால் கொடுக்கின்றன. வெளவால்கள் இரவில் இயங்குவன. 'பறக்கும் நரி' என்ற வெளவால் இனம் மிகப்பெரியவை. தென் அமெரிக்காவில் இரத்தம் உறிஞ்சி வெளவால்கள் உள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சில் தப்பினார்

சேர் வின்ஸ்ரன் சர்ச்சில் இரண்டாம் உலகப்போரில் புகழ்பெற்றவர். இவர் இங்கிலாந்தைக் காப்பாற்றிய பிரதமர் எனப்போற்றப்பட்டார்.

1899ஆம் ஆண்டு போயர் யுத்தம் வெடித்தது. பிரித்தானியாவிற்கும் போயர் குடியரசிற்கும் இடையே இப்போர் தென்ஆபிரிக்காவில் நடைபெற்றது. சர்ச்சில் போர் முனைக்கு ஓர் இளம் பத்திரிகையாளன் என்ற முறையிலேதான் சென்றார். அவர் அங்கு போய்ச் சேர்ந்த உடனேயே மரணத்தின் பயங்கர வலைக்குள் அகப்பட்டுக் கொண்டார். ஆனால் அவரிடம் இயற்கையாகக் காணப்பட்ட சிறந்த குணஇயல்புகள் அவர் தப்புவதற்கு உதவின. ஆபத்துகளை எதிர்த்துக் கொள்ளுதல், தோல்வியைஏற்றுக் கொள்ள மறுத்தல் என்ற இரண்டு குண இயல்புகளும் அவரிடம் இயற்கையாகவே காணப்பட்டன.

என்ற்கோற் என்ற சிறிய நகரம். ரயில் மெதுவாக நின்றது. அந்த ரயிலில் பிரித்தானியா போர்வீரர்கள் இருந்தார்கள். அந்த ரயிலில் 'மோர்ங் போஸ்' என்ற ஆங்கில தினசரியின் இளம் நிருபரும் இருந்தார். அவர்தான் சர்ச்சில். ரயிலின் என்ஜினுக்கு முன்னால் மூன்று பெட்டிக்ளும் பின்னால் மூன்று பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன. முன்னால் ஓடவேண்டிய ரயில் பின்னால் நகரத் தொடங்கியது. முன்னால்போயர் படைவீர்கள்ரயிலைநோக்கி அணிவகுத்துவருவதை என்ஜின்டிரைவர் கண்டு விட்டார். உடனே அவர் ரயிலை பின்பக்கமாக ஓட்டத் தொடங்கினார். மலையின் வளைவொன்றை ரயில் வெகுலாவகமாக திரும்பிக் கடந்தது. தீடீரென்று மிகப் பிரகாசத்துடன் குண்டொன்று ரயிலின் முன்புறத்தைத் தாக்கியது. முன்பக்கப் பெட்டிகள் குடை சாய்ந்தன. ரயிலின் முன்பகுதி தடம் புரண்டது. பலர் காயப்பட்டனர். சிலர் இறந்து போய்விட்டனர். காயப்பட்டவர்களையும் இறந்தவர்களையும் எடுப்பதற்கு சுமார் எழுபது நிமிடங்கள் சென்றது. ரயிலை ஓட்டத் தொடங்கலாம் என்றால் அது முடியாமல் போனது. தண்டவாளத்தின் மேலே பாரமான ஆறு அங்குல நீளமான இரும்புத் துண்டு போடப்பட்டிருந்தது. எவ்வளவு முயற்சித்தும் அதனை அப்புறப்படுத்த முடியவில்லை. ரயில் மலைச்சாய்வில்தான் நின்று கொண்டிருந்தது. எனவே ரயில் என்ஜினை வேகமாக ஓட்டினால் போடப்பட்டிருந்த இரும்புத்துண்டு அசைந்து விழுந்துவிடும் என்று சர்ச்சில் எண்ணினார். என்ஜின் வேகமாக ஓடியது. இரும்புத்துண்டைத் தாண்டியது. ஆனால் மீண்டும் தண்டவாளத்தில் இரும்புத்துண்டு விழுந்துகிடந்தது. பெட்டிகள் தனித்து நின்றன. என்ஜினில் காயப்பட்ட நாற்பது போர்வீரர்களை ஏற்றும்படியும் ஏனைய வீரர்களை என்ஜினுக்குப் பின்னால் நடக்கும்படியும் சர்ச்சில் கேட்டுக்கொண்டார். அவரது யோசனை ஏற்கப்பட்டது. என்ஜினுக்கு முன்னால் சர்ச்சில் நடந்து சென்றார். சுமார் நூறு மீற்றர் நடந்திருப்பார். திடீரென்று இரண்டு போயர் படைவீரர்கள் எதிரே வந்தார்கள். துப்பாக்கியை நீட்டி ஏதோ கட்டளையிட்டனர். சர்ச்சிலுக்குதப்பவழியே இல்லை.வேறு வழியில்லாமல் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கினார். அவர் போர்க் கைதி ஆகினார். தான் பத்திரிகை நிருபர் என்பதை போயர் மேல





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகாரிகளுக்கு எடுத்துக் கூறினார். அவர்கள் செவி சாய்க்கவே இல்லை. பிறிற்ரோறியா என்ற இடத்திற்கு அவரைக் கொண்டு சென்றனர். அரச பாடசாலைக்கட்டடத்தில ஏனைய போர்க் கைதிகளுடன் சிறை வைக் கப்பட்டார். வழக்கமாக சாதாரண பொது மக்கள் இராணுவ வீரர்களுடன், சிறை வைக் கப்படுவது இல்லை. அதற்கு மாறாக சர்ச்சில் சிறை வைக்கப்பட்டார்.

சர்ச்சில் சூழலை அமைதியாக அவதா னித்தார். தப்புவதற்கு வழிகளை யோசிக்கத் தொடங்கினார். ஐம்பது மீற்றர் இடைவெளி யில் காவல் வீரர்கள் இருப்பதை அவதானித் தார். சில காவல்நிலைகளில் இருந்து பார்த் தால் கிழக்குப் பகுதியில் இருந்த சிறிய கக்கூஸ் கண்ணுக்குத் தெரியாது என் பதைக் கண்டு கொண்டார். அந்தக் கக்கூஸ் பகுதியில் வெளிச்சமும் போடப்பட்டிருக்க வில்லை. அந்த இடத்தை சர்ச்சில் தப்புவ தற்கு தேர்ந்தெடுத்தார்.

காவல் வீரர்கள் கவனயீனமாக தமக் குள் கதைத்துக் கொண்டிருப்பதை அவர் அவதானித்தார். மெதுவாக கக்கூசுக்குச் சென்றார். அதன்மீது ஏறினார். மிகவும் கெட் டித்தனமாக காவல் சுவரைத் தாண்டினார். காவல் வீரர்கள் கவனிக்கவே இல்லை. பற் றைகளுக்குள்ளால் நடக்கத்தொடங்கினார். தன் தொப்பியைத் தலையில் போட்டுக் கொண்டார். மிகவும் அலட்சியமாக நடந் தார். வாசல் கேற் ஒன்றை மிகவும் சாவதான மாகக் கடந்தார். அந்தக் கேற்றில் இருந்து 5 யார் தூரத்தில் காவல் நிலையொன்று காணப்பட்டது. ஓடுவோமோ என்று யோசித் தார். பிறகு மனதை அமைதிப்படுத்தினார். மிக இயல்பாக நடந்துசென்றார். யாரும் அவ ரைச் சந்தேகிக்கவில்லை. சுமார் நூறு யார் நடந்திருப்பார். அவர் மனதில் மகிழ்ச்சி தோன்றியது. அவர் பிறிற்றோரியாபகுதியில் இருப்பதை உணர்ந்தார். அந்த நகரவீதியில் பாட்டொன்றை முணுமுணுத்தபடி நடந்தார். வீதியில் நிறைய பறங்கியர் காணப்பட்டனர். அவர்கள் அவரை அவதானிக்கவே இல்லை. அவருடைய பொக்கற்றில் எழுபத்தைந்து பவுண் இருந்தது. நான்கு சொக்லேட்டும் இருந்தது. பொழுதுவிடிவதற்குள் நான் தப்பி விடவேண்டும். ரயில் பாதையொன்று தென் பட்டது. அதன்மீது நடக்கத் தொடங்கினார். சுமார் இரண்டு மணிநேரம் நடந்திருப்பார். அப்பாடா! ரயில் நிலையம் கண்ணில் தென் பட்டது. ரயில் நிலைய மேடைக்குப் பின் னால் சிறிய குழியொன்று காணப்பட்டது. அதற்குள் பதுங்கியிருந்தார். சில நிமிடங் களில் ரயில் வந்தது. அதுபொருட்களை ஏற்றும் வண்டி. ரயில்ஓடத் தொடங்கும்போது ஓடிச்சென்று தொற்றிக் கொண்டார். இரண்டு பெட்டிகளை இணைக்கும் கப்பிலிங்கில் சமாளித்தவாறு நின்றார். விடிவதற்குள் ரயி லில் இருந்து இறங்கிக் கொண்டார். பகல் முழுவதும் அடர்ந்த மரப்பகுதியில் ஒழித்தி ருந்தார். இரவு வந்தது. மீண்டும் நடக்கத் தொடங்கினார். பசியோ வயிற்றைக் கிள்ளி யது. தாகமோ தொண்டையை வரட்டியது. இனி மேலும் நடக்க முடியாத நிலை.

ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். யன் னல் திறந்தது. ஐயா! விபத்தொன்றில் சிக்கி விட்டேன். தயவு செய்து கதவைத் திறவுங் கள் என்று கேட்டார் சர்ச்சில். அவர் வீட்டிற் குள் அனுமதிக்கப்பட்டார். அங்கு காணப் பட்ட மனிதனுக்கு தனது கதையைக் கூறி னார். அந்த மனிதன்சிரித்தான். நான்திரான்ஸ் வால் கூலிரிகளின் முகாமையாளன். இந்த வீட்டைத்தவிர வேறு வீடுகளைத் தட்டி உதவிகேட்டிருந்தால் பிடிபட்டிருப்பீர்கள் என்று அவர் கூறினார். இருவரும் கைகுலுக் கிக் கொண்டனர்.

இரண்டு கிழமைகள் சென்றன. அரசாங் கம் சர்ச்சிலைத் தேடித்தேடி அலுத்துவிட் டது. ஒருநாள் இரவு இரண்டு மணி. கம்பளி ஏற்றிச் செல்லும் லொறியொன்றில் கள்ள மாக ஏற்றப்பட்டார். சிலமணி கடந்தபின் மிகவும் சாமர்த்தியமாக ரயில் ஒன்றில் ஏற் றப்பட்டார். ரயில் ஓடிக்கொண்டே இருந்தது. அதில் பயந்தபடியே பிரயாணம் செய்தார். அதிர்ஷ்டம் சர்ச்சில் பக்கம் இருந்தது. ஒரு புகையிரத நிலையத்தில் தேடல் நடந்தது. அவர் மெதுவாக இறங்கி அடுத்த மேடைக் குச் சென்று தப்பிக்கொண்டார். மீண்டும் ரயில் பயணம் தொடர்ந்தது. அடுத்த ரயில் நிலையத்தில் அவரை அதிர்ஷ்ட தேவதை நன்கு அரவணைத்தாள். போர்த்துக்கீச போர் வீரர்கள் மேடையில் நின்றனர். அவர்க ளைக் கண்டவுடன் சர்ச்சில் மிகுந்த சந்தோ ஷத்துடன் ரயிலில் இருந்து இறங்கினார். அங்கிருந்து அவர் கப்பலில் டர்பனுக்குச் சென்றார். டர்பன் துறைமுகம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக் கான மக்கள் அவரை வரவேற்கத் திரண்டி ருந்தனர். இராணுவ அட்மிரலும் நகரபிதா வும் அவரைக் கைகுலுக்கி வரவேற்றார்கள். மக்கள் அவரைத் தமது தோள்களில் சுமந்து சென்றனர். நகரமண்டபத்தில்அவரது பேச்சை ஆர்வமாகக் கேட்டனர்.

வரலாற்றுப் புகழ் மிக்க நாயகர் ஆவதற்கு இந்த நிகழ்ச்சி அத்திவாரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. அவரது பேச்சாற்றல் மகத்தானது.எழுத்தாற்றல் திறமையோ அளவிடற்கரியது. 1900ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். 1914ஆம் ஆண்டு அமைச்சரவையில் இடம்பெற்றார். இரண்டாவது உலகப் போரின் போது இங்கிலாந்தின் பிரதமர் என்ற உயர் கௌரவம் கிடைத்தது. நேசநாடுகளின் வெற்றிக்கு சர்ச்சில் காரணமானார். 1953ஆம் ஆண்டு இவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1965இல் காலமாகினார்.

### அழகு

அழகே உண்மை, உண்மையே அழகு.

*- கீட்ஸ்*

அழகு இறைவனின் அன்பளிப்பு.

*- அரிஸ்டாட்டில்*

இயற்கையின் நாணம் அழகு.

*- மில்டன்*

# விடுப்பால் வந்த நட்டம்

விடுப்புப் பிடுங்கும் ஒரு மனைவியின் தொல்லைகளால் அவஸ்தைப்பட்டான் அவளது கணவன். அவ்வளவுக்கு விடுப்புக்காரி. அயலவர்கள் பற்றிய எல்லா விபரங்களையும் அறியாவிட்டால் அவள் நின்மதியாக உறங்கமாட்டாள்.




ஒருநாள் அவளது கணவன் எலிக்கூட்டில் அகப்பட்ட ஒரு சுண்டெலியை ஒரு பெட்டிக்குள் அடைத்து மனைவியிடம் கொண்டு சென்றான். "அன்புடையவளே! இன்று முழுநாளும் நான் வெளியே செல்லவேண்டியுள்ளது. எனக்காக இந்தப் பெட்டியைப் பாதுகாப்பாக வைத்து இன்று மாலை இங்குவரும் எனது தம்பியிடம் அப்படியேகொடு. எக்காரணம் கொண்டும் பெட்டியைத்திறக்கவேண்டாம். இதற்குள் உனக்கு ஆர்வமான எதுவுமில்லை. திறக்கமாட்டேன் எனச்சத்தியம் செய்துதருகிறீரா? அல்லது பெட்டியை ஒட்டிச்'சீல்' வைக்கட்டுமா, எனக் கணவன் கேட்டான்.

'பெட்டியைத் திறக்கமாட்டேன்' என மனைவி சத்தியம் செய்ய கணவன் தனது கடமைக்கு வெளியே சென்றான்.

அவன் சென்று சற்று நேரத்திற்குள் அவள் பெட்டியைத் திறந்தாள். சுண்டெலி பெட்டியில் இருந்து வெளியே பாய்ந்து தப்பி ஓடிவிட்டது.

மாலைகணவன் வேலையால் திரும்பியதும்மனைவியிடம் பெட்டியைக்கொண்டு வருமாறு கூறினான்."அந்தப் பெட்டிக்குள் சுண்டெலி ஒன்றை அடைத்து வைத்திருந்தேன். அந்தச்சுண்டெலி இன்னும் பெட்டிக்குள் இருந்தாலபரிசாக உனக்கு அளிப்பதற்கு வைரமோதிரம் ஒன்று வழங்குவதற்காக வாங்கிவந்திருக்கிறேன். சுண்டெலி இல்லை எனில் நாளை காலை மோதிரத்தை கடைக்குத் திரும்பிக் கொடுத்திடுவேன்" எனக் கணவன் தெரிவித்தான்.

ஆனால் சுண்டெலி இருந்தால்தானே. ஒரு வைரமோதிரத்தை இழக்கும் அளவுக்கு அவ்வளவு விடுப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்ச தேவதை

முன்னொருகாலத்தில் பரணஸ் நகரை அரசன் ஒருவன் ஆண்டுவந்தான். ஒருநாள் அந்த அரசனுக்குப் புதுமையான ஆசை தோன்றியது.

"இந்த உலகில் உள்ள மன்னர்கள் அனைவரும் பல தூண்களைக் கொண்ட அரண்மனைகளிலேயே வசிக்கிறார்கள். ஒரு தூணில் அமையும் அரண்மனையை நான் கட்டினால் உலகத்தில் உள்ள மன்னர்களிடையே எனது புகழ்பரவும்" என்பதே அரசனது ஆசையாகும்.

அரசன் உடனே கட்டடக் கலைஞர்கள்



அனைவரையும் அழைத்து ஒரு தூணில் மாத்திரம் அமையும் அரண்மனை ஒன்றைக் கட்டித்தருமாறு கட்டளையிட்டான். கட்டடக் கலைஞர்களும் சம்மதித்து பொருத்தமான மரத்தைத் தேடிக் காட்டுக்குச் சென்றனர்.

காட்டில் அரண்மனை அமைக்கப் பொருத்தமான மரம் ஒன்று காணப்பட்ட போதிலும் அதைக் காட்டிலிருந்து கொண்டு வருவது கஷ்டமானதாக இருந்தது. மரம் மிகவும் விசாலமாக இருந்தது. மேலும் அதைத் தறித்தாலும் சேற்றுப்பகுதி ஊடாக அதைக் கொண்டுவர முடியாது. தங்களது இயலாமையைக் கட்டடக் கலைஞர்கள் அரசனிடம் தெரிவித்தனர்.

தனது ஆசையைக் கைவிட விரும்பாத அரசன் அரச பூங்காவிலுள்ள பாரிய நாக லிங்க மரத்தைத் தறித்து அரண்மனையை அமைக்குமாறு பணித்தான்.

பாரியநாகலிங்கமரத்தில் விருட்சதேவதை வசிப்பதைத் தொழிலாளர்கள் அறிவர். அரசனது கட்டளையை நிறைவேற்றாவிடின் தமக்கு மரண தண்டனை கிடைக்கும் என்பதையும் தொழிலாளர்கள் அறிவர். அவர்கள் மரத்தின் அடியில் பல்வேறு பூஜைகளை நடத்தினர்.

"வனதேவதையே இன்னும் சில நாள்களில் இந்த மரத்தை தறிக்கவுள்ளோம். எனவே உனது வதிவிடத்தை வேறு மரத்திற்கு மாற்றி எங்களை மன்னித்துவிடு" என விருட்ச தேவதைக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

தொழிலாளர்களால் அரசனது கட்டளையை மீறமுடியாது; அவர்களுக்கு மாற்று வழி இல்லை என்பதை விருட்சதேவதை அறிந்துகொண்டது. தொழிலாளர்கள் மீது விருட்ச தேவதை கருணை கொண்டது.

அன்றிரவு விருட்ச தேவதை தன்னை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அரசனது படுக்கை அறைக்குள் சென்றது. விருட்சதேவதையின் ஒளியினால் திடீரெனக் கண் விழித்தான்.

"மிகவும் அழகான ஆடை ஆபரணங்களை அணிந்து ஒளிவீசும் உனது முகத்தில் சோகம் தென்படுகிறது. நீ யார்?" என அரசன் வினாவினான்.

"மன்னா! அரண்மனைப் பூங்காவிலுள்ள விசாலமான மரத்தில் வசிக்கும் விருட்ச தேவதை நான். தங்களுக்கு முன்னர் ஆட்சி செய்த பல மன்னர்கள் அரண்மனைகளை அமைத்தபோதும் அவர்களால் எனக்கு எந்த வித உபத்திரவமும் ஏற்படவில்லை. ஆனால் உன்னால் ஏற்பட்டுள்ள உபத்திரவத்தைத் தாங்க முடியவில்லை" என விருட்ச தேவதை தெரிவித்தது.

தனது தேவைக்கு இதுவே மிகவும் பொருத்தமான மரம் என்ற முடிவை அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் மாற்ற முடியவில்லை.

"அவ்வாறு எனில், மன்னவா! எனக்கு ஒரே ஒரு வரம் மாத்திரம் அளியுங்கள். முதலில் மரத்தின் நுனிப்பகுதியை வெட்டுங்கள். பின்னர் மரத்தின் நடுப்பகுதியை தறியுங்கள்; இறுதியில் மரத்தின் அடிப் பகுதியைத் தறியுங்கள்" என விருட்ச தேவதை வேண்டுகோள் விடுத்தது.

"விருட்ச தேவதையே அப்படி மரத்தைத் தறித்தால் உனக்கு வேதனை அதிகரிக்காதா? ஒரே முறையில் அடியோடு தறித்தால் உனக்கு வேதனை குறையுமே" என அரசன் தெரிவித்தான்.

"மன்னா, நீ சொல்வது உண்மையே. ஒரேயடியாக பாரிய மரமொன்றைத் தறித்து விழுத்தும் போது அந்த மரத்தைச் சுற்றி வளரும் பல்வேறு மரங்கள் அழிய நேரிடும். எனவே எனது உறவினர் பலர் ஆபத்துக்களை எதிர் நோக்க நேரிடும். எனக்கு என்ன வேதனை ஏற்பட்டாலும் அதைத் தாங்க நான் தயார். ஆனால் எனது உறவினர்களுக்கு ஏற்படும் இன்னல்களை என்னால் தாங்க முடியாது - எனது மரணத்திலும் நின்மதி ஏற்படாது" என விருட்ச தேவதை தெரிவித்தபோது அரசன் மனம் மாறினான். அவனைத் துக்கம் பீடித்தது.

ஏனையோரின் துன்பங்களைக் கருத்தில் கொள்வது - ஜீவகாருண்யம் ஆகிய விருட்ச தேவதையின் பண்புகளைக் கண்ட மன்னன் வியப்படைந்தான்.


விருட்ச தேவதையை வணங்கிய மன்னன் நாகலிங்க மரத்தை வெட்டப்போவதில்லை எனத் தெரிவித்தான். விருட்சதேவதையும் மன்னனை ஆசிர்வதித்து மகிழ்ச்சியுடன் மீண்டது.

*(சிங்களக் கதையின் தமிழாக்கம் - முகம்)*

# பெரும்பான்மையும் சிறுபான்மையும்

பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஆட்டிப்படைக்க நினைப்பதால்தான் இன்று உலகில் இவ்வளவு பிரச்சினை.

ஒரு நாள் வாயிலுள்ள 32 பற்களுக்கும் (பெரும்பான்மையினர்) நாக்கிற்கும் (சிறுபான்மையினர்) கருத்து மோதல் ஏற்பட்டது.



"நாங்கள் எவ்வளவு கடுமையான வேலைகளைச் செய்கிறோம். பெரும்பான்மையினரான நாங்கள் உணவைக்கடித்து அரைத்துக் கொடுக்க சிறுபான்மையினரான 'நாக்கு' சுகமாக இருந்து ருசி பார்க்கிறது. இதைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. இது பெரும்பான்மையினருக்கு அவமானம். நாக்கைக் கடித்து எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம்" - இது பற்கள் ஒன்று கூடி எடுத்த தீர்மானம்.

நாக்கு பொறுமையாக இருந்தது. பலசாலியான ஒருவன் தெருவால் சென்று கொண்டிருந்தான். அவனை வம்புக்கு இழுத்துத் திட்டியது. அவன் முகத்தின்மீது சரமாரியாக தாக்குதலைமேற்கொண்டான். அப்போது பற்கள் எல்லாம் உடைந்து, நொருங்கி வேருடன் சாய்ந்தன.

இப்போது மனிதனிடம் மிஞ்சியிருப்பது சிறுபான்மையினரான நாக்கு மட்டும்தான்.

❁

## விவசாயம்

*கலப்பையும் மண்வெட்டியும் உலகுக்கு உணவளிக்கின்றன.*
- பல்கேரியா

*உங்கள் சந்ததியினருக்கு சரியான இரண்டு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லிக் கொடுங்கள். அவை இலக்கியமும் விவசாயமும்.*
- சீனா


*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.* - திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயலாதது எதுவுமில்லை

கெட்ட பழக்கங்கள் மற்றும் துர்நடத்தையில் ஈடுபடும் கும்பலுடன் தனது மகன் தொடர்பு கொண்டிருப்பது குறித்து தந்தை ஒருவர் மிகவும் மனம் குழம்பியிருந்தார்.



எனவே தனது மகனை திருத்தி நல்வழிப் படுத்த அவனது மனத்தைக் கவரும் விதத்தில் திட்டம் தீட்டினார். "கெட்ட தொடர்புகள் நற் பண்புகளைக் கெடுத்துவிடும்" என்பதை மகனுக்குப் புரியவைப்பதே அந்தத் திட்டமாகும்.

ஒருநாள் காலை கண்ணுக்குக் குளிர்சியான பழுத்த, அளவில் பெரிதான பன்னிரண்டு மாம்பழங்களைவாங்கிவந்தார். மகனை அழைத்து "இந்தப் பழங்கள் அனைத்தும் உனக்கே உரியன. ஆனால் இவற்றை நாளை மாலையே தருவேன்" எனக்கூறி அழுகிய நிலையில் இருந்த ஒரு பழத்தை ஒரு பெட்டியின் மத்தியில் வைத்து ஏனைய பழங்கள் அதில் முட்டும் விதத்தில் நெருக்கமாக அடுக்கி அலுமாரியில் வைத்தார்.

அடுத்தநாள் மாலை மகன் வந்து, தந்தையிடம் தனது மாம்பழங்களைத் தருமாறு கேட்டான். "பழங்கள் அனைத்தும் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு அலுமாரிக்குள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை எடுத்து நீ விரும்பிய அளவுக்கு உண்ணலாம் எனத் தந்தை தெரிவித்தார். மகனால் ஒரு மாம் பழத்தைக்கூட உண்ண முடியவில்லை. காரணம் பெட்டியின் நடுவில் வைக்கப்பட்ட அழுகிய மாம்பழங்கள் எல்லாவற்றிலும் முட்டியதால் எல்லாப் பழங்களும் அழுகிவிட்டன.

"இவ்வாறுதான் மகனே கெட்டவர்களின் சேர்க்கையினால் கெட்டு நாசமாக வாய்ப்புக்கள் உள்ளன" எனத் தந்தை மகனுக்கு விளக்கினார்.

அழுகிய ஒரு பழம் எவ்வாறு மிக விரைவாக நல்ல நிலையில் இருந்த பழங்களை அழுக வைத்துள்ளது என்பதை உணர்ந்து - அதன் தார்ப்பரியத்தால் கவரப்பட்ட மகன் அன்றிலிருந்து கெட்டவர்களின் சேர்க்கையைக் கைவிட்டான்.

*செய்முறைப் பயிற்சிகள் சிறுவர்களின் உள்ளங்களில் எவ்வாறு பதிகின்றன; எவ்வாறு கவர்கின்றன என்பதற்கு இது நல்லதோர் உதாரணமாகும்.*

## உங்கள் சிந்தனைக்கு...


1. எவன் எவன் சிறகுகளுக்கு எவ்வளவு வலுவுண்டோ அவன் அவன் அவ்வளவு உயரம் பறந்தே தீருவான். - தமிழ் அறிஞன்
2. சொன்ன சொல்லையும் எறிந்த கல்லையும் திருப்பி அழைக்க முடியாது. - இங்கிலாந்து
3. பக்தியோடு பிரார்த்தனை செய் - ஆனால் சுத்தியலைப் பலமாய் அடி. - இங்கிலாந்து
4. கத்தி சாணைக் கல்லைத் தின்கிறது. சாணைக்கல் கத்தியைத் தின்கிறது. - ஆபிரிக்கா
5. தலைக்கு மேல் பறவை பறப்பதை உன்னால் தடுக்க முடியாது - ஆனால் அது உன் தலையில் கூடு கட்டுவதைத் தடுக்க முடியும். - அமெரிக்கா
6. மலிவாக விற்கிறவன் கடனுக்கு விற்க மாட்டான். கடனுக்கு விற்கிறவன் மலிவாக விற்க மாட்டான். - நைஜீரியா

**-சீ.பாலதயாகரன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் கரோல்



மிகவும்மந்தமான குளிரான மதியநேரம். எல்லா இடங்களும் பனியால் மூடப்பட்டு இருந்தன. வீடுகள் கூட பனியால் மூடப் பட்டுக் காணப்பட் டன. ஆயினும் அது கிறிஸ்மஸ் காலம். வயதுபோன "கருமி" குருச்வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டி ருந்தான். அவனை யாருமே மதிப்ப தில்லை. தெருவில் செல்லும்போதுகண்டால் வாழ்த்துக்கள் கூறுவது கூடக் கிடையாது. பிச்சைக்காரர்கள் கூட அவனிடம் பிச்சை கேட்பது கிடையாது. எல்லோராலும் வெறுக்கப்பட்டவன் குருச். மிகவும் பாவம் செய்தவன்.


அவனைப் பற்றிய ஒரு சம்பவம் -

மாமா! மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் வாழ்த் துக்கள்! ஆண்டவன் உம்மைக் காப்பாராக! இவ்வாறு. அவனது மருமகன் கூறினான். மடையா! மகிழ்ச்சியான கிறிஸ்மஸ்? நீ எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும்? நீ ஏழை! மகிழ்ச்சியாக இருக்கமுடியாதே! இப் படி கருமி குருச் கத்தினான்.

இவனுக்கு ஒரு எழுதுவினைஞன் இருந் தான். சம்பளம் மிகவும் குறைவு. ஆனால் அவன் விசுவாசமானவன். வருடத்தில் ஒரு நாள்தான் அவனுக்கு விடுமுறை.அது கிறிஸ் மஸ் நாள். இதனைக்கூட குருச் விரும்ப வில்லை.

இவனது மனைவி மார்லி. இவள் ஏழு வருடங்களுக்கு முன் இறந்து போனாள். குருச் தனிமையாகவே வாழ்ந்து வந்தான். உணவு கூட சரிவரச் சாப்பிடமாட்டான். அவனது ஒரே நோக்கம் பணத்தைச் சேர்ப்பது தான்! பணம்! பணம்!! அவனுக்கு பணம் தான் எல்லாம்!

கிறிஸ்மஸுக்கு முதல் நாள் பெரிய கதவு ஊடாகஒருபேய் அறைக்குள் வந்தது. அது அறைக்குள் வந்ததை அவனால் உணர முடிந்தது. வந்த பேய் யார்? யாரு மில்லை. அவனது மனைவி மார்லிதான். அந்தப் பேய் சங்கிலிகளால் கட்டப் பட்டிருந்தது. பாவச் செயல்கள் தான் இரும்புச்சங்கிலியாகி இருந்தது என்று கூறியது பேய். அன் பரே! உமது பாவச் செயல்களால் ஏற் படுத்திவரும் இரும் புச் சங்கிலிகளை நீர் பார்க்க வேண் டுமா? என்று கேட் டது பேய். அவனது சாவு எப்படி நிகழும் என்பதை அவன் கனாப்போல் கண் டான். திடீரென்று மூன்று ஆவிகள் தோன்றின. நடந்து முடிந்த கிறிஸ்மஸ், நிகழும் கிறிஸ்மஸ், எதிர்கால கிறிஸ்மஸ் என்று தம்மைக் கூறிக் கொண்டன. நிகழும் கிறிஸ்மஸ் ஆவியுடன் குருச் வெளியே வந்தான்.



சிறுவர், பெரியவர், ஆண்பெண், ஏழை, பணக்காரன் என்று எல்லோரும் ஆனந்தமாக கொண்டாடிக் கொண்டிருந்தனர். தனது ஏழை எழுதுவினைஞன், அன்பு மருமகள், பாடுபட்டு உழைக்கும் ஏழை மீனவர்கள் என்று பல வீடுகளையும் சென்று பார்த்தார் கள். எல்லோரும் மகிழ்ச்சியோடு சிரித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

கிறிஸ்மஸ் நாள் உதித்தது. குருச் மனம் மாறிய புதிய மனிதன் ஆகினான். மருமக னுக்கு கிறிஸ்மஸ் விருந்து தடபுடலாகக் கொடுத்தான். ஏழை மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தான். ஏழை எழுதுவினை ஞனின் சம்பளத்தை உயர்த்தினான். அவன் "நல்லதொரு நண்பனாக, நல்ல எஜமானாக, நல்லதொரு மனிதனாக" மாறிவிட்டான்.

*(கிறிஸ்மஸ் கரோல் என்ற நூல் 1843ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)*

*கடவுளுடைய வாக்கு அவரது ஞானத்தினுடைய, ஆற்றலினுடைய நிறையான பிம்பம் அல்லது வடிவம் எனலாம். இத்தகைய தேவஞானமும் ஆற்றலும் வடிவெடுத்தவரே இயேசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்ப முடிகிறதா?

# மறக்கப்பட்டவர்கள்


கி.பி. 1096 முதல் 1291 வரை ஐரோப்பாவில் ஆட்சி செய்த கிறிஸ்தவ அரசர்கள் ஜெருசலேமை விடுவிக்க படாத பாடுபட்டனர். முக்கியமாக ஒன்பது பெரும் சிலுவைப் போர்களைச் செய்தனர். ஆயினும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இத்தோல்விகள் பல சிறுவர்களைப் பாதித்தது. ஏன் நாமே இம் முயற்சியில் இறங்கக்கூடாது என்று அவர்கள் சிந்தித்தனர். 1212 ஆம் ஆண்டு - இடையர் சிறுவன் ஸ்ரீபன் 30,000 சிறுவர் சிறுமியரைக் கொண்ட படையொன்றைத் திரட்டினான். பத்து முதல் பதினாறு வயதுடையவர்கள் இப்படையில் சேர்க்கப்பட்டனர். இந்த சிறுவர் சிலுவைப் போர்வீரர்கள் பிரான்ஸ்தேசத்தில் வென்டோம் நகரில் இருந்து புறப்பட்டனர். மார் செயிலிங் சென்று அடைந்தனர். அங்கு சில அயோக்கிய கப்பல் வியாபாரிகள் இவர்களுக்கு உதவுவதாக முன் வந்தனர். பாலஸ்தீனத்தை நோக்கி கப்பல்களில் சென்றனர். பலர் கடலிலே இறந்து போனார்கள். ஏனையவர்களை அடிமைகளாக விற்றனர். இதே ஆண்டில் ஜெர்மன் சிறுவன் நிக்கலஸ் சிறுவர் படைதிரட்டி முன்னேறினான்ஆனால் அதுவும் அழிந்தது. நடக்க முடியாததைச் செய்ய எண்ணிய சிறுவர்கள் இறந்துபோய் விட்டார்கள். ஆனால் அவர்களது இலட்சியமும் மன உறுதியும் போற்றத்தக்கவை.



# பக்திப்புள்ள மதகுரு

தேவாலயம் ஒன்றில் மிகவும் பக்தியுள்ள மதகுரு ஒருவர் இருந்தார். தேவன் மீது அவர் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தார். ஏழைகளை மிகவும் நேசித்து வந்த அவர் தினமும் நண்பகல் வேளையில் தேவாலய வாசலில் அவர்களுக்கு உணவு வழங்குவார்.

ஒரு நாள் இந்தக் குருவானவர் தனது அறையில் தனியாகப் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். திடீரென பிரகாசமான ஒளி ஒன்று தோன்றியது. தன்முன்பாக யேசுநாதர் தோன்றியிருப்பதை அவர் அவதானித்தார். அற்புதமான காட்சியாக அது அமைந்திருந்தது. தேவனின் பார்வையில்எத்தனை கருணை. சிலுவை மீது அறையப்பட்ட யேசுவாக அவர் காட்சியளிக்கவில்லை.. ஏழைகள், ஊனமுற்றவர்களுடன் நடந்து திரியும் யேசுவாகக் காட்சியளித்தார்.



பக்தியுடனும் ஆனந்தத்துடனும் மதகுரு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். அவரது மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. அவ்வேளையில் தேவாலய மணி ஒலித்துக் கொண்டிருந்தது. அப்போது மத்தியான நேரம். அவர் ஏழைகளுக்கு உணவளிக்கும் நேரம் அதுவே.

மதகுருவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.சென்று ஏழைகளுக்கு உணவு வழங்குவதா? அல்லது தொடர்ந்து பிரார்த்திப்பதா? ஏழைகளுக்கு உணவு அளிக்கச் செல்வதாயின் திரும்பிவரும்வரை தேவன் காத்திருப்பாரா? தேவனின் தோற்றம் மறையும் வரை தேவாலய வாசலில் ஏழைகள் காத்திருப்பார்களா? ஒரே குழப்பமான நிலை. அப்போது அசரீரி ஒன்று கேட்டது.

"உனது கடமையைச் செய். அதுவே சிறந்தது.

ஏனையவற்றைக் கடவுளிடம் விடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதகுரு சற்றும் தாமதிக்கவில்லை.உடன் சென்று தேவாலயக் கதவை திறந்தார். ஏழைகள் அவருக்காகக் காத்திருந்தனர். அவர்கள் கடும்பசியுடன் காணப்பட்டனர். "அதிக நேரம் காத்திருக்கிறீர்களா? தயவு செய்து மன்னிக்கவும். நான் அறையில் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். தேவன் பாணும் திராட்சை ரசமும் வழங்கினார்" என மதகுரு கூறினார். அன்று ஏழைகளுக்கு தேவாலயத்தின் கதவுகள் சொர்க்கத்தின் கதவுகள் போலிருந்தன. அவர்கள் மகிழ்ச்சியுடன் பாணை உண்டு திராட்சை ரசத்தை அருந்தினர். என்றுமில்லாத மகிழ்ச்சியுடன். ஏழைகள் தேவாலயத்தை விட்டகன்றனர்.

தனது கடமை முடிந்தவுடன் மதகுரு விரைவாக தனது அறைக்குத் திரும்பினார். என்ன அற்புதம்! யேசுநாதர் மதகுருவுக்காக அங்கு காத்திருந்தார். "நீர் உனது கடமையைச் செய்திராவிடின் நான் போயிருப்பேன்". என யேசுநாதர் கூறினார்.

*(ஆங்கில மூலம் - தமிழில் கஜனி)*



இங்கே பாரும் இவனொரு சிறுவன்
கள்ளம் கபடம் கயமைகள் இல்லா
உள்ளம் படைத்த உயர்ந்த குழந்தை!
கொள்ளை நோய்போல் கூடிய வயதில்
பிள்ளை போலே பிழையா திருந்தால்
விண்ணர ச்சைநீ விரைவில் அடையலாம்!
சிறுவனைப் போல சிறியோ னாக
எவனெவன் தன்னை எண்ணுகின் றானோ
விண்ணில் அவனே வியத்தகும் மனிதன்!

# சிறுவனின் சாதனை

## பெற்றோரின் கவனத்துக்கு:

மயூரன் லண்டன் செ‌ன்.யோன்ஸ் ஆரம்ப பாடசாலை மாணவன். மிகவும் குறும்புக்காரன். இதனால் பல அவதானக் குறிப்புக்களை ஆசிரியர்கள் தந்தைக்கு அனுப்பினார்கள். இவனது தந்தை கந்தையா சந்திரகுமார் மிகவும் கவலையடைந்தார். அவர் பிரபலமான பகுதிநேர சத்திர சிகிச்சை நிபுணர். அவரது சொந்த இடம் யாழ்ப்பாணம் திருநெல்வேலி. மகனைத் திருத்த என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவரே அவருக்கு கணிதம் கற்பித்தார். அவனது குண இயல்புகளைக் கூர்ந்து அவதானித்தார். அவனது குறைபாடுகளை கண்டறிந்தார். அவனை மாலைநேரப் பாடசாலையிலும் சேர்த்தார். வோர்டிங் வீதி கல்லூரியில் அவன் படிக்கத் தொடங்கினான்.முயற்சி வீண் போகவில்லை. **GCSE** கணிதப் பரீட்சையில் '**B**' தரம் பெற்றான். இந்த சின்னஞ்சிறு வயதில் இது பெரிய சாதனையாகும். பல பத்திரிகைகளும் தொலைக்காட்சியும் இவனைப்பற்றி செய்திகள் வெளியிட்டன.


ஒன்பது வயது
கணித நுண்ணறிவாளன்

இவனது **IQ** 150. என்ன மாற்றம்! என்ன திறமை!!

*(நன்றி - த கெசற்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சளைக்காத வீரர்
## சச்சின் டெண்டுல்கர்



'எந்த யுக்தியைக்கையாண்டு நான் பந்து வீசினாலும் டெண்டுல்கர் எனக்கு சிம்மசொப்பனமாகவே இருக்கிறார்' இப்படிக்கூறியவர்உலகில்முதல்தர சுழல் பந்து வீச்சாளரும், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமுமான ஷேன் வோர்ண்.

"டெண்டுல்கர் மிகச் சிறந்த பட்ஸ்மன் மட்டுமல்லாது மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்" என்றார் தமிழ் நாட்டு வீரராக இந்திய அணியில் பிரகாசித்த ஸ்ரீகாந்த்.

இப்படிப்பட்ட புகழாரங்களை எல்லாம் பெற்றுக்கொள்பவர் உலகின் நம்பர் வண் பட்ஸ்மன் சச்சின்டெண்டுல்கர்.

1989ஆம் ஆண்டு தனது பதினாறாவது வயதில் பாகிஸ்தான் அணியுடனான கிரிக்கெட் ஆட்டத்தின் மூலம், தனது தேசிய கிரிக்கெட் வாழ்க்கையுள் காலடி எடுத்து வைத்த இவர் இன்றுவரை நிலை நாட்டி வரும் சாதனைகள் ஒன்று இரண்டல்ல.தனது மின்னல் வேகத் துடுப்பாட்டத்தின் மூலம் உலகெங்கும் தனக்கென ரசிகர் கூட்டங்களைச் சம்பாதித்துக்கொண்டவர். ஒருநாள் போட்டிகளில் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகவே அனேகமாகக் களமிறங்கும் இவர் தனது அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பார்வையாளர்களைப் பரவசப்படுத்துவதே இவருக்கு வழக்கமாகிவிட்டது.

தற்போது இருபத்தாறு வயது மட்டுமே நிரம்பிய சச்சின் இதுவரை இந்திய அணியை இரண்டு தடவை வழிநடத்தும் பொறுப்பை ஏற்று நடத்தியுள்ளார். இவருக்கு 23ஆவது வயதில் முதன்முதல் இந்திய அணிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது. இவரது தலைமையின் கீழ் இந்திய அணி விளையாடிய 17 டெஸ்ட் போட்டிகளில் 3இல் வெற்றியும் 4இல் தோல்வியும் 10 போட்டிகள் சமனிலையாகவும் நிறைவடைந்தன. மற்றும் நடைபெற்ற 54 ஒருநாள் போட்டிகளில் 17இல் வெற்றியும் 31இல் தோல்வியையும் சந்தித்துக் கொண்டது. ஆனாலும் இவரது தலைமையின் கீழ் சஹாராக் கிண்ணம் கைப்பற்றப்பட்டமை இவரது தலைமைப் பதவிக்குக் கிடைத்த பெரு வெற்றி.

சச்சினின் தலைமையின் கீழ் இந்திய அணியின் ஸ்திரநிலைமை அவ்வளவாக சோபிக்காத காரணத்தால் தலைமைப் பதவி மீண்டும் அஸாருதீனுக்கு வழங்கப்பட்டது. ஆனாலும் தற்போது சுமார் 18 மாத இடைவெளியின் பின் அணித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சச்சின் தான் இந்த முறை தலைமைப் பதவியை ஒரு சவாலாகவே எதிர்கொள்வதாகக் கூறியுள்ளார். இந்திய அணியைப் பொறுத்தவரை இப்படிப்பட்டவொரு சகலதுறை ஆட்டக்காரரைத் தன்னகத்தே கொண்டிருப்பது மிகப்பெரிய பொக்கிஷமே!

உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் மேதையென அழைக்கப்படும் டொன் பிரட்மன் ஒருமுறை தனது மனைவியிடம் சச்சின் துடுப்பாடும் வேகத்தைப் பார்த்தாயா. நான் துடுப்பாடுவது போலேயே ஆடுகிறான். நான் துடுப்பெடுத்தாடுவதைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்காவிட்டாலும் சச்சினின் துடுப்பாட்டத்தில் என்னைக் கண்டு பூரிப்படைகிறேன்" எனக் கூறினாராம். ஆம்! சச்சினின் ஆட்டம் அவ்வளவு அபாரம். விளையாட்டில் நுட்பம், களத்தில் நிற்கும் போது நிதானம், துடுப்பாடும் போது விக்கெட்டுக்களுக்கிடையில் ஓட்டம் எடுக்கையில் உள்ள இலாவகம் இவையெல்லாம் சச்சினுக்குக் கைவந்த கலை. இவர் பயன்படுத்தும் சுமார் 3 இறாத்தல் 2 அவுன்ஸ் எடையுள்ள துடுப்பை எப்படித்தான் சுமந்து ஆடுகிறாரோ எனப் பலருக்கு ஆச்சரியம். ஆனால் இவர் விரும்பி அடிக்கும் பல அடிகளுக்கு இந்தத் தேர்வே இவருக்கு உதவியளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

346744

ஆனாலும் இந்த அடிகள் மூலமே இவருக்கு அடிக்கடி முதுகுவலி ஏற்படுவதாக மருத்துவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனாலும் இந்த அடிகள்தான் அவ்வப்போது பந்தை எல்லைக் கோட்டுக்கு அப்பால் அனுப்ப இவருக்கு உதவுகிறது.

கடந்த மாதம் ஹைதராபாத்தில் நியூஸிலாந்து அணியுடன் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இவர் அடித்த 186 ஓட்டங்களின் மூலம் இவர் பெற்ற சதங்களின் எண்ணிக்கை 24 ஆகவும் இவர் பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டி ஓட்ட எண்ணிக்கை 8570 ஆகவும் உயர்ந்துள்ளது. இவரது வயதை சதங்களின் எண்ணிக்கை முந்துமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அத்துடன் இந்த ஒருநாள் போட்டியிலேயே ராகுல் ட்ராவிட்டுடன் சேர்ந்து இரண்டாம் விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக 331 ஓட்டங்களைப் பெற்று உலகசாதனை படைத்துள்ளார்.

"அடுத்து இடம்பெறும் உலகக் கிண்ணப் போட்டியில் உலகக் கிண்ணத்தை சுவீகரிப்பதே எனது இலட்சியம்" என சச்சின் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

- திருக்குமரன் -

# எங்களால் முடியும்!

அன்புள்ள தம்பிமார்களே! தங்கைமார்களே!

அர்ச்சுனா இரண்டாவது இதழ் உங்கள் கைகளிலே!

அர்ச்சுனா முழுவதும் உங்கள் ஆக்கங்களே வரவேண்டும். உங்கள் கைவண்ணங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

(1) கட்டுரைகள்
(2) சிறுகதைகள்
(3) கவிதைகள்
(4) செய்தித் துணுக்குகள்
(5) நகைச்சுவைத் துணுக்குகள்
(6) ஓவியங்கள்

உடனே எழுதி அனுப்புங்கள்!

இவற்றைவிட........

'அர்ச்சுனா' பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

எதை நீங்கள் விரும்புகிறீர்கள்?

எதைச் சேர்க்கலாம்?

நீங்கள் எழுதி அனுப்பவேண்டிய முகவரி......

அர்ச்சுனா - உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*(பக்கம் 39இன் தொடர்ச்சி...)*

சரி - இப்போது விடையைச்சரி பாருங்கள் -

1) 2. (2 x 2 = 4) (2+2 = 4) வேறு எந்த எண்ணுக்கும் இந்தச் சிறப்பு இல்லை.

2) 7 - 3 x 2 = 8

3) 4

4) 5, 6, 7, 8, 9

5)

| | | |
|---|---|---|
| 2 | 7 | 6 |
| 9 | 5 | 1 |
| 4 | 3 | 8 |

ஐந்தும் சரி எடுத்தால் நீங்கள் விவேகி.

**ஒரு காரியத்தைச் செய்யும் போது, என்ன? ஏன்? எப்பொழுது? எப்படி? எங்கே? யார்? என்ற ஆறு நேர்மையான கேள்விகளைக் கேட்டு ஆரம்பிக்க வேண்டும். இக்கேள்விகளை உங்களையே நீங்கள் கேட்க வேண்டும். எல்லாம் நல்லபடியாக முடியும்.**

***- ருட்யார்ட் கிப்ளிங்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிலே விஞ்ஞானம்

வீட்டிலே உன்னைச் சுற்றிப் பார்! வீட்டிற்குள் என்ன தெரிகிறது? வெளியிலே பார்! என்ன தெரிகின்றது....... உம்மைச் சுற்றி பலபொருள்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில உயிர்வாழ்வன. சில உயிரற்றவை. இவைதான் விஞ்ஞான உலகத்தை உருவாக்குபவை. இவற்றைக் கொண்டு பல இயந்திரங்களும் கருவிகளும் செய்யப்பட்டன. செய்யப்பட்டுவருகின்றன. நீங்கள் எங்கிருந்தாலும், மக்களால் செய்யப்பட்ட பொருள்கள் உங்களைச் சுற்றிவர இருக்கும். நீர் அணிந்திருக்கும் உடைகள் மக்களால் செய்யப்பட்டவை. நீர் உபயோகிக்கும் எல்லாப் பொருள்களும் மக்களால் செய்யப்பட்டவைதான். மக்கள் தமக்குத் தெரிந்த விஞ்ஞானத்தைக் கொண்டு அப்பொருள்களைச் செய்து காட்டினர். உமக்கும் விஞ்ஞான உலகத்தைப் பற்றி நிறையத்தெரியும். அவற்றுள் சில.........

உயிர் வாழும் பொருள்கள் வளர்பவை, மாறுபவை.

எம்மைச் சூழவர காற்று இருக்கின்றது.

வெப்பமான காற்று மேல் எழுகின்றது.

காலநிலை ஒரேமாதிரியாக இருக்கமாட்டாது.

வெப்பம் நீரை வேகமாக ஆவியாக்குகின்றது.

இப்படி பல விஞ்ஞான விடயங்கள் உமக்குத் தெரியும். ஆனால் நீர் விஞ்ஞானியாக மாறவேண்டாமா? புதுப்புது பொருள்களை நீர் கண்டுபிடிக்க வேண்டாமா?அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஏன்? எப்படி? எதற்கு? என்றெல்லாம் கேட்டு கண்டு பிடிக்கவேண்டும். சின்னச் சின்ன பரிசோதனைகளை நீரே செய்ய வேண்டும். பாடசாலையில்தான் பரிசோதனை செய்யலாம் என்றில்லை. உமது வீட்டிலும் செய்யலாம். பரிசோதனைகள் உம்மைச் சிந்திக்க வைக்கின்றன. அறிய ஆர்வமுள்ள இயல்பு மிகவும் முக்கியமானது. இந்த இயல்பை உங்களிடம் வளர்க்க விரும்புகின்றோம்.

(1) முதலில் நீங்கள் "விஞ்ஞானக் குறிப்பு புத்தகம்" ஒன்றை வைத்திருக்க வேண்டும். அதில் நீங்கள் செய்கின்ற பரிசோதனைகளை எழுதிவைக்க வேண்டும். இது மிகவும் முக்கியம்.

(2) எதைக் கண்டு பிடிக்க வேண்டும்? அதற்குத் தேவையானவை என்ன? என்ன செய்யவேண்டும்? நீர் அறிந்து கொண்டது என்ன? நீர் அறிந்து கொண்டதை எப்படி பயன்படுத்துவீர்? இப்படி சில பக்கங்களை பரிசோதனைகளுக்கு என்று ஒதுக்கி வைக்கவும்.

உங்களுக்கு உதாரணம்:-

**பரிசோதனை**

**1. எதைக் கண்டுபிடிக்க வேண்டும்?**
எண்ணெய் நீரிலும் கனமானதா?

**2. என்ன தேவைப்படும்?**
ஒரு கிளாஸ், நீர், எண்ணெய்.

**3. என்ன செய்வேண்டும்........**
கிளாஸில் அரைவாசிக்கும் மேல் நீர் ஊற்ற வேண்டும். சுமார் ஓர் அங்குலம் வரை எண்ணெய் ஊற்றுக.


**4. அறிந்து கொண்டதென்ன......**
எண்ணெய் மேலுக்கு நிற்கின்றது. எனவே எண்ணெய் நீரிலும் பார்க்க கனமானது இல்லை.

**5. நீர் அறிந்ததை எப்படி பயன்படுத்தலாம்......**
எண்ணெய் காரணமாக நெருப்பு மூண்டு விட்டது. அத்தீயை நீரினால் அணைக்க முடியாது. ஏனென்றால் நீரை அடிக்க அடிக்க எண்ணெய் மேலுக்கு வந்து எரியும்.

(3) சில பக்கங்களை விஞ்ஞானம் பற்றிய செய்திகளுக்காக ஒதுக்கவேண்டும்.

இப்போது உமக்கு ஒரு பரிசோதனை - எதைக் கண்டுபிடிக்க வேண்டும்.......

**வினா:-** உப்பில்லாத நீரிலும் பார்க்க உப்புள்ள நீர் கனமானதா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவையானவை:-** நீர், உப்பு, முட்டை, கரண்டி, பாத்திரம்.

உமக்கு இப்போது அடுத்த நிலை: என்ன செய்யவேண்டும்.

சரி, படத்தை நன்கு அவதானித்துக் கொள்ளும். வினாவிற்கான விடையைக் கண்டுபிடியும்.

சரியான விடையை எமக்கு அனுப்பவும்! விடையை கீழே தரப்பட்டுள்ள பத்திரத்தில் எழுதி அனுப்பவேண்டும்.

### வீட்டில் விஞ்ஞானம் போட்டி

பெயர்:-....................................................

பாடசாலை:-..............................................

படிக்கும் தரம்:-.......................................

பிறந்த திகதி:-.........................................

**என்ன செய்தேன்:**

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

**எப்படி விடை பெற்றேன்:**

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

.............................................................

முடிவு திகதி: **15-02-2000**

அனுப்பவேண்டிய முகவரி:

அர்ச்சுனா, உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**'செந்தமிழ்' என்றால் -**

1. தூய்மை அல்லது பிறமொழிச் சொல் லின்மை.
2. திருத்தம் அல்லது எழுத்தும் சொல் லும் ஒலிப்பிலும் எழுத்திலும் உரியவடிவில் இருத்தல்.
3. இலக்கணம் அல்லது சொற்றொடர் அமைப்பில் வழுவின்மை.

இம்மூவியல்பும் இல்லாதது கொடுந் தமிழ் எனப்படும்.

*(கருத்து - மொழிஞாயிறு தேவ நேயப் பாவாணர்)*

## முயன்று பாருங்களேன்!



**மிருகங்களுக்கு உணவு போடவேண்டும்.**

தினேஸ்ஸும் டிலானியும் தமது பிராணி நண்பர்களுக்கு உணவு போட விரும்பினார்கள். ஆனால் எதை எதற்கு கொடுப்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தயவு செய்து தினேஸ்ஸுக்கும் டிலானிக்கும் உதவுங்கள்.

எப்படி..........

ஒவ்வொரு பிராணியிலிருந்தும் அது சாப்பிட விரும்பும் உணவிற்கு கோடு கீறுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் விவேகம் எப்படி?

1. ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்கினாலும் அந்த எண்ணுடன் அதே எண்ணைக் கூட்டினாலும் வரும் தொகை ஒன்றே. அது எது?

*(ஐந்து நிமிடத்திற்குள் விடை எழுதுக)*

விடை

2. இந்த மூன்று எண்களுக்கும் போட வேண்டிய கணிதக் குறியீடுகளைப் போட்டு கணக்கை முழுமையாக்குக.

7 3 2 = 8

*(இரண்டே நிமிடத்தில் செய்ய வேண்டும்)*

விடை

3. ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்கி, அதே எண்ணைக் கழித்தால் வருவது 12. அந்த எண் என்ன?

*(மூன்று நிமிடத்தில் விடை தருக)*

விடை

4. ஓர் எண்ணை மீண்டும் பயன்படுத்தாமல், ஐந்து எண்களைக் கூட்டினால் வருவது 35. அந்த ஐந்து எண்களையும் எழுதுக.

*(ஒரேயொரு நிமிடம்)*

விடை

5. பின்வரும் சதுரத்தில், எந்த வரிசையில் - கீழிருந்து மேலாக, பக்கவாட்டில், குறுக்குவாட்டில் - கூட்டினாலும் 15 வரும்படி எண்களைப்போட்டு நிரப்பவேண்டும். ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

| | | |
|---|---|---|
| 6 | 7 | 2 |
| 1 | 5 | 9 |
| 8 | 3 | 4 |

**(விடைகள் 36ஆம் பக்கத்தில்)**



**வழி எது?**

**தனது துவிச்சக்கரவண்டியின் திறப்பைத் தொலைத்துவிட்ட ரவிக்கு, திறப்பைக் கண்டபிடிக்கும் வழி எது என்று காட்டி உதவுங்கள்!**

பாலில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன?

கொழுப்பும் காபோஹைதரேட்டும் பாலில் உள்ளன. பாலில் உள்ள சர்க்கரைப்பொருள் லாக்டோஸ் எனப்படும். தாதுப்பொருள்களும் பாலில் இருக்கின்றது. கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, செம்பு, மாங்கனிஸ், மக்னீசியம், குளோரின், அயடின் போன்ற தாதுப்பொருள்கள் பாலில் இருக்கின்றன. உயிர்ச்சத்துக்களான **A,B,$B_2$,C,D** ஆகியன பாலில் இருக்கின்றன. ஒவ்வொரு **1/2** லீற்றர் பாலிலும் சுமார் 35 கிராம் திட உணவுப்பொருள் இருக்கின்றது.

பால் குடியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்டால் பொன்னாகும்

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு......

கிரேக்க தேசத்தை மைதாஸ் என்ற அரசன் ஆண்டான். அவன் மிகவும் செல்வந்தன். அவனது அரண்மனை அறையொன்று முழுவதும் பொன் நாணயங்கள். அவன் எவ்வளவு பணக்காரன் என்பது தெரிகிறதல்லவா?

ஆனால் அவன் சரியான உலோபி. அவன் மிகவும் பேராசைக்காரன். சின்னச் செலவுகூடச் செய்யமாட்டான். தன் மகள் தங்கத்திற்குக்கூட ஒன்றும் வாங்கிக்கொடுக்க மாட்டான். தங்கம் மிகவும் அழகானவள். அவள் மிகவும் புத்திசாலி. ஆயினும் அவன் அவளுக்காகக் கூட செலவு செய்யமாட்டான். அவன் தனது பொன்னைத்தான் மிகவும் நேசித்தான்.



ஒருநாள் பொன் நாணயங்களை அவன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று ஒருமனிதன் தோன்றினான். அவன் திகைத்து விட்டான். நீ எப்படி இங்கு வந்தாய்? என்று கேட்டான். புதிய மனிதன் சிரித்தான். பயப்படாதே! உனது செல்வத்தைப் பார்க்கவே வந்தேன். அற்புதமான செல்வம். நீ ஏன் கவலைப்படுகின்றாய்? என்று புதிய மனிதன் கேட்டான். கவலைப்படாமல் இருக்க முடியுமா? இவ்வளவு செல்வமும் போதாது. மேலும் செல்வம் சேர்க்க வேண்டும். நான் தொடுவது எல்லாம் பொன்னாகினால் எவ்வளவு நல்லது என்று மைதாஸ் சொன்னான்.

அப்படியா? உனக்கு நான் அந்த வரத்தைத் தருகின்றேன். பின்னால் நீயே கவலைப் படவேண்டிவரும் என்று கூறினான் புதிய மனிதன். பரவாயில்லை. நீர் அந்த வரத்தைத்தந்தால் உலகத்திலே மிகவும் சந்தோஷமான மனிதன் நானாகத்தானிருக்கும் என்றான் மைதாஸ். சரி இப்பொழுது முதல் உமக்கு அந்த வரம் பலிக்கும் என்று கூறினான் புதிய மனிதன். மைதாஸ் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். புதிய மனிதன் திடீரென்று மறைந்தான்.

மைதாஸ் மேசையைத் தொட்டான். அது பொன்மேசையாக மாறியது. மைதாஸ் கல்லைத்தொட்டான். அது பொன்னாகியது. அவனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாமல்போனது. ஓடிஓடி எல்லாப் பொருள்களையும் தொட்டான். எல்லாம் பொன்னாகியது. மைதாஸ் மிகவும் களைத்துப்போய்விட்டான். அவனுக்கு மிகவும் பசித்தது.

தண்ணீர் குடிக்க தண்ணீர்ப் பானையை எடுத்தான். பானை பொன்னாகியது. நீரும் பொன்னாகியது. சாப்பிட 'கேக்கை' எடுத்தான். கேக்கும் பொன்னாகியது. முட்டையை எடுத்தான். முட்டை பொன்னாகியது. மீனை எடுத்தான். அதுவும் பொன்னாகியது. மைதாஸ் பயந்துவிட்டான். தன்மகள் தங்கத்தைக் கூப்பிட்டான். மகளே! என்று அன்புடன்கூறி அணைத்தான். அவளும் பொற்சிலை ஆகினாள். மைதாஸ் கலவரம் அடைந்தான். சிறுபிள்ளைபோல் பெரிதாக அழத் தொடங்கினான்.

திடீரென்று அவன் முன் புதியமனிதன் தோன்றினான்.

நண்பனே! ஏன் அழுகின்றாய்? என்று புதியமனிதன் கேட்டான்.

ஐயோ! என்னால் சாப்பிட முடியாது. என்னால் குடிக்க முடியாது. அது மட்டுமா? எனது அருமை மகளும் பொற்சிலை ஆகி விட்டாள். இவ்வாறு கூறிப் பெரிதாக அழுதான் மைதாஸ்.

மைதாஸ்! பொன்னா நீரா சிறந்தது? என்று கேட்டான். ஐயோ! நீர் தான் சிறந்தது என்றான் மைதாஸ்.

உணவு வேண்டுமா? பொன் வேண்டுமா? என்று கேட்டான். உணவுதான் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்றான் மைதாஸ்.

உனக்கு உன்மகள் வேண்டுமா? அல்லது பொற்சிலை வேண்டுமா? என்று அவன் கேட்டான்.

ஐயோ! எனக்கு என் மகள்தான் வேண்டும் என்று கதறி அழுதான் மைதாஸ்.

புதிய மனிதன் சிரித்தான். மைதாஸ்! நீ திருந்திவிட்டாய். பயப்படவேண்டாம். நீ தொட்டதெல்லாம்இப்போது பழையநிலைக்கு வந்துவிடும். இனி நீ தொடுவது பொன்னாகாது. இவ்வாறு கூறிய புதியமனிதன் மறைந்தான். மைதாஸ் நிம்மதியாகச் சிரித்தான். தன் அன்பு மகளைக் கட்டிஅணைத்தான். இருவரும் மகிழ்ச்சியாக உணவு உண்ணத்தொடங்கினார்கள். மனிதன் பொன்னால் மாத்திரம் சீவிக்கமுடியாது. பேராசை பெருநட்டம்.

**(ச. தமிழினி)**




# வில்லியம் வோர்ட்ஸ்வேர்த் (1770 - 1850)
## [WILLIAM WORDS WORTH]

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கவிதைகளில் " மறுமலர்ச்சி" இவரால் ஏற்படுத்தப்பட்டது. முன்னிருந்த கவிஞர்கள் போல் இல்லாமல் இயற்கையை இரசித்து எழுதியவர் வோர்ட்ஸ் வேர்த். பறவைகள், பூக்கள், மரங்கள், கிராமியச் சூழல், நாகரிகத்தினால் கெடுக்கப்படாத கிராமங்கள் என்பன கவிஞரின் இதயத்தைக் கவர்ந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக சிறுவர்களின் கள்ளங்கபடமற்ற தன்மையும் எளிமையும் அவரைக் கவர்ந்தது. குழந்தையின் தெய்வீகத்தன்மையை நம்பினார். இயற்கை எண்ணங்களை இயற்கை மொழியில் எழுதினார். நகர நாகரிக வாழ்க்கை மனிதனை இயற்கையிலிருந்து இழுத்துச்சென்றுவிட்டது என்று அவர் கூறினார்.நாளாந்தவாழ்க்கையில் காணப்படுபவற்றை அழகு சேர்த்துமெருகூட்டி எழுதினார். உலகத்தின் அற்புதங்களைக் கண்டு வியந்தார். அதனை எல்லோரும் இரசிக்க வேண்டும் என்று விரும்பினார். "ரின்ரேர்ன் அபேக்கு சில மைல்களில் இருந்து எழுதிய வசனங்கள்" என்ற கவிதை குறிப்பிடத்தக்கது. இதைவிடப் பல கவிதைகள் பிரபலமாகின. அவற்றுள்சில -

(1) ஏன் சென்ற் மரினின் றைம்
(2) ரேபிள்ஸ் ரேன்ட்
(3) எக்ஸ்பொச்ருலேசன் அன்ட் ரிபிளை
(4) சொலிட்டரி றீப்பர்
(5) குக்கூ பேர்ட்
(6) சீ டுவெல்ற் எமொங் த அன் ரொடின் வேய்ஸ்

பின்வரும் பாடலை உங்களால் படிக்க முடியுமா........

**BEHOLD HER, SINGLE IN THE FIELD,**
**YON SOLITARY HIGHLAND LASS!**
**REAPING AND SINGING BY HERSELF**
**STOP HERE, OR GENTLY PASS!**

*

*தமிழனுக்கு தாய்மொழியினிடம் தணியாத வேட்கை என்று எழுகின்றதோ அன்றே, அவன் வாழ்வு வளம் பெறும்.*

*- திரு வி.க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1. அவுஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தவர் யார்?**

உலகத்தின் மிகப்பெரிய தீவுகளில்




ஒன்று அவுஸ்திரேலியா. உலகத்தின் சிறிய கண்டம் அவுஸ்திரேலியா. அதனுடைய பரப்பளவு 7,687,000 சதுரகிலோ மீற்றர். அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்த முதல் ஐரோப்பியர்கள் ஒல்லாந்தர். நெதர்லாந்து, ஜாவா என்பவற்றிற்கிடையே பிரயாணம் செய்யும் போதே அவுஸ்திரேலியாவைக் கண்டனர். அவுஸ்திரேலியாவின் மேற்குக் கடற்கரைக்கேஇவர்கள்சென்றனர். இந்த மேற்குப்பகுதிக்கு 'புதிய ஒல்லாந்து' என்று பெயர் சூட்டினர். 1642இல் கப்டன் அபல் டாஸ்மன் தாஸ்மேனியாவைக் கண்டறிந்தான். நியூசிலாந்தைக் கண்டறிந்தவனும் இவனே! 1770இல் ஆங்கில கப்டன் ஜேம்ஸ்குக் நியூசவுத் வேல்ஸ் என்ற கிழக்கு அவுஸ்திரேலியாவைக் கண்டறிந்தான். 1788இல் இங்கிலாந்தின் முதலாவது குடியேற்ற நாடு உருவாக்கப்பட்டது. அது தான் இன்றைய சிட்னி நகரம்.

**2. பறவைகளுக்கு காது இருக்கின்றதா?**

பறவைகளுக்கு கேட்கும் உணர்வு மிகவும் அவசியம்.பறவைகளுக்குகாதுஉண்டு.

**3. மண்ணில் தாவரங்களை வளரச் செய்வது எது?**



எல்லாத் தாவரங்களும் வளர்வதற்கு பத்து அம்சங்கள் தேவைப்படுகின்றன. அவற்றில் ஏழு அம்சங்கள் மண்ணில்தான் உள்ளன. அவையாவன - நைற்றோஜின், பொஸ்பரஸ், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு, சல்பர், மற்ற மூன்றும் காற்றில் அல்லது நீரில் பெறப்படுகின்றது. பிராணவாயு, ஹைரோஜின், கார்பன்.

மண்ணில் காணப்படும் பல விடயங்கள் தாவரங்கள் வளர்வதற்கு உதவுகின்றது. முக்கியமாக 'கியூமஸ்' மண்ணில் காணப்படுகிறது. மண்ணில் காணப்படும் பற்றீரியாவிற்கு இது உணவாகின்றது.

மண்ணில் வாழும் மிருகங்களின் எச்சங்கள் தாவரம் வளர்வதற்கு உதவுகின்றது. மண்ணில் காணப்படும் புழுக்கள் மிகவும் முக்கியமானவை. மண் வளத்திற்கு இவை உதவுகின்றன.


**4. மீன்கள் எப்போதாவது நித்திரை கொள்ளுமா?**

நாங்கள் கண்களைத் திறந்தபடி நித்திரைகொள்ள முடியுமா? இல்லை. எமது இமைகளை மூடியே நாம் நித்திரை செய்யலாம். மீன்களுக்கு கண் இமைகள் இல்லை. அதுமாத்திரமா? மீன்கள் எம்மைப்போல் கண்ணீர்விடவும் முடியாதுள்ளன. ஆனால் மீன்கள் எம்மிலும் பார்க்க கூடிய பரப்பைக் காண்கின்றன. அவை ஒவ்வொரு கண்ணிலுமிருந்து வெவ்வேறு விதமான பிம்பங்களைக் காண்கின்றன. அவை தமக்கு முன்னால், பின்னால், மேலே காணும் திறன் படைத்துள்ளன. சில மீன்கள் மாத்திரம் நிறங்களைக் காணும் திறன் உள்ளவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. பைசா கோபுரம் எவ்வளவு உயரமானது?**



இத்தாலி நாட்டில் பைசாநகரம் இருக்கின்றது. இங்குதான் உலக அதிசயமான சாயும் பைசாகோபுரம் இருக்கின்றது. வெள்ளைப்பளிங்கால் கட்டப்பட்டது. சுவர்கள் 4மீற்றர் கனம் ஆனவை. 8 அடுக்குகள் உள்ளன. அதனுடைய உயரம் 54.5 மீற்றர். முன்னூறு படிகள் கட்டப்பட்டுள்ளது. சுமார் 5 மீற்றர் சாய்ந்துள்ளது. அதாவது கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒரு கல்லைப் போட்டால் அது கீழே கோபுரத்தின் அடிப் பகுதியில் இருந்து 5 மீற்றர்தள்ளியே விழும். கடந்த நூறு வருடத்தில் 0.3 மீற்றர் சாய்ந்துள்ளது.

**6. ஒலி நீரில் பயணம் செய்யுமா?**




எல்லா ஒலிகளுக்கும் ஆதாரமாக உள்ளது அதிர்வுகளே. நீரில் ஒலி மிகவேகமாகச் செல்லும். காற்றில் ஒலி ஒரு செக்கனிற்கு 335 மீற்றர் வேகத்தில் செல்கின்றது. ஆனால் ஒலி கடல் நீரில் ஒரு செக்கனிற்கு 1,463 மீற்றர் வேகத்தில் செல்கின்றது. கடல் ஆழத்தை அளவிடுவதற்கு ஒலி உதவுகின்றது.

**7. தடுப்பூசிகளை கண்டறிந்த முன்னோடிகள் யார்?**

1798ஆம் ஆண்டில் எட்வோர்ட் ஜென்னர் தடுப்பூசி பற்றி ஆராய்ந்தார். அக்காலத்தில்



இங்கிலாந்தில் அம்மை நோய் காரணமாகப் பலர் இறந்தனர். ஜென்னர் இந்த நோயை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி ஆராய்ச்சி செய்தார். மாட்டு அம்மை பற்றி ஆராய்ந்தார். அக்கிருமிகளை பையன் ஒருவனது கையில் ஏற்றினார். அவன் அம்மை நோய்க்கு இலக்காகமாட்டான் என்பதைக் கண்டறிந்தார். அவர் கண்டுபிடித்த அம்மைப் பால் குத்தும் முறை வெற்றியளித்தது. லுயீ பாஸ்ரர் தடுப்பூசிகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பதை விஞ்ஞான ரீதியாக எடுத்துக்காட்டினார். எனவே இவர்கள் இருவருமே முன்னோடிகள் எனப்பட வேண்டும்.

நன்றி என்பது இதயத்தின் இசை.
– இங்கிலாந்து

நன்றி மூன்றுவகை : இதயத்தில் உணர்தல், சொல்லால் கூறுதல், பதிலுக்கு உதவி செய்தல்.
– அரேபியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திரகிளேசும் சிங்கமும்

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உரோமாபுரியில் அந்திரகிளேஸ் வாழ்ந்தான். அவன் ஒரு அடிமை. அவனது எஜமான் அவனை மிகவும் துன்புறுத்தினார். காலை முதல் மாலைவரை கடுமையாக வேலை செய்வான். ஆனாலும் எஜமான் சந்தோசப் படமாட்டான். அவர் அவனை அடிப்பார், ஏசுவார். உண்பதற்குக் கூட போதுமான உணவு கொடுக்கமாட்டார். துன்பம் தாங்க முடியாமற் போனது. அந்திரகிளேஸ் ஓடிவிட முடிவு செய்தான்.

ஒருநாள் அதிகாலை யாருக்கும் சொல்லாமல் அவன் ஓடிப்போனான். அவன் மிக மிக வேகமாக ஓடினான். சுமார் இரண்டு மணிநேரம் ஓடினான். பொழுது விடிவதற்குள் அவன் நகர எல்லையைக் கடந்துவிட்டான். அவன் மிகவும் களைத்துவிட்டான். சற்று நேரம் ஒரு மரத்தடியில் இருந்தான். ஐயோ! யாரும் என்னைத் தேடிவந்து விடுவார்களோ? என்னைப் பிடித்தால் அடித்து உதைத்து கைகாலை முறித்து விடுவார்களே! இப்படி பலவாறு யோசித்து யோசித்துப் பயப்பட்டான். பயத்தால் அவனது உடம்பு நடுங்கியது.



எழுந்து மீண்டும் ஓடத்தொடங்கினான். களைத்தால் மெதுவாக நடப்பான். சற்று நேரம் இளைப்பாறுவான். மீண்டும் ஓடத் தொடங்குவான். இப்படி இரண்டு நாள்கள் சென்றன. மாலை நேரம். சூரியன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கினான். அவன் இரவு படுப்பதற்கு இடம் தேடினான். குகையொன்று தென்பட்டது. அதற்குள் சென்று படுத்தான். நல்ல குறட்டைவிட்டு நித்திரை செய்து கொண்டிருந்தான். பெரிய சத்தம் கேட்டது. அது சிங்கத்தின் கர்ஜனை. அவன் பயத்துடன் கண்ணை விழித்துப் பார்த்தான். என்ன பயங்கரம். அவனுக்கருகே சிங்கம். சிங்கம் அவனை முழித்துப் பார்த்தது. சரி! தொலைந்தோம் என்று அவன் நினைத்தான். இது என்ன அதிசயம்! அவனருகே அது படுத்தது. தனது வலது காலைத் தூக்கிக் காட்டியது. அவனது பயம் ஓடிவிட்டது. அதனது பாதத்தை உற்றுப் பார்த்தான். பெரிய ஆணியொன்று பாதத்தில் ஏறியிருந்தது. சிங்கத்திற்கு நோகாமல் மெதுவாக அந்த ஆணியை இழுத்து எடுத்தான். அதனது பாதத்தை தடவி தடவிக் கொடுத்தான். சிங்கத்தின் கண்களில் புதிய ஒளி. "நன்றி! நன்றி" என்று சிங்கம் சொல்வது போல் தோன்றியது. சிங்கம் மெல்ல எழுந்தது. மெதுவாக நடந்து வெளியே சென்றது.

மறுநாள், அவன் தன் பயணத்தைத் தொடர்ந்தான். ஆனால் என்ன கொடுமை. அவனை எஜமானின் ஆட்கள் தேடிப் பிடித்து விட்டனர். அடிஅடியென்று அடித்தனர். கைகால்களைக் கட்டினர். அவனை மீண்டும் உரோமாபுரிக்குக் கொண்டு சென்றனர். அடிமைகள் ஓடுவது பெரிய குற்றம். அவனை விசாரித்த நீதிபதிவழமையானதண்டனையை விதித்தார். அது மிகவும் பயங்கரமான தண்டனை.

பெரிய விளையாட்டு மைதானம். சுற்றிவர பெருந்திரளான மக்கள். அந்திரகிளேஸ் மைதானத்தின் நடுவில் நின்றான். பெரிய இரும்புக்கூண்டு. அதில் சிங்கமொன்று அடைத்து வைக்கப்பட்டிருந்தது. முதல் நாள்தான் அச்சிங்கம் பிடிக்கப்பட்டிருந்தது. கூண்டுக்குள் சிங்கம் அட்டகாசம் செய்து கொண்டிருந்தது. கூண்டு மெதுவாக திறக்கப்பட்டது. மக்கள் எல்லோரும் என்ன நடக்குமோ? என்று ஆவலோடு பார்த்தனர். அந்திரகிளேஸ் பயந்து நடுங்கினான். கடவுளே! நான் என்ன செய்ய முடியும்? பலவாறு அவன் சிந்தித்தான்.

சிங்கம் வெளியே வந்தது. மக்கள் ஆரவாரம் செய்தனர். அவனை நோக்கி சிங்கம் ஓடியது. அவனுக்கு உயிரே போய்விட்டது. பாய்ந்து வந்த சிங்கம்... நின்றது! அவனை உற்றுப் பார்த்தது. அதன் கண்களில் ஆச்சரியம். அவனைச் சுற்றிசுற்றி வந்தது. வாலை வாலை ஆட்டியது. அவனதுகாலைநக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! அது அவனை இனம் கண்டு விட்டது. தனது காலில் ஆணியை எடுத்தவன் அவன் தான் என்பதை உணர்ந்து விட்டது. தனது வலது காலைத் தூக்கிக் காட்டியது. அவன் அதனது பாதத்தைத் தடவிக்கொடுத்தான். அது கீழே இருந்தது. அதன் முதுகில் அவன் ஏறினான். சிங்கம் பாய்ந்து சென்றது. மக்கள் திகைத்து நின்றனர். காட்டுக்கு வெகுவேகமாக அது ஓடி விட்டது. அன்று முதல் அவன் சிங்கத்துடன் காட்டில் ஆனந்தமாக வாழ்ந்தான்.

*(ஐரோப்பிய தேச பரம்பரைக் கதை)*

# ஆங்கிலம் கற்போம்


**'A' எழுத்தும்-அதை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்களும்-**




அப்பிள்

அனிமல் - மிருகம்

ஆன்ற்ரி - மாமி




ஏரோப்பிளேன் - ஆகாயவிமானம்

**ANT** -ஆன்ற் - எறும்பு

**ADD** -அட் - கூட்டு (+) இணை

**ACT** -அக்ற் - நடி

**ARM** -ஆர்ம் - மேற்கை, தோள்

**AIR** -எயர் - காற்று


**ART** -ஆர்ட் - கலை

**AGE** -ஏஜ் - வயது

**ASS** -ஆஸ் - கழுதை

## பாடசாலையில் பாவிக்கும் பொருட்கள்

PLEASE READ ALOUD-




உம்மால் வாசிக்க முடியுமா?

5க்கு கீழ் - மேலும் முயற்சி வேண்டும்.

5 - 8 - நன்று

9 - 10 ஓ! திறமைசாலி!

(48ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி

**சிறுவர், சிறுமியரே!**

இதோ உங்களுக்கு ஒரு குறுக்கெழுத்துப்போட்டி. இந்தப் புதிரில் அனைத்துச் சொற்களும் மூன்று எழுத்துக் கொண்டவை. ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது. அதை வைத்துக் கொண்டு சொற்களை ஊகித்துக் கண்டு பிடித்து, மேலிருந்து கீழாக சொற்களை எழுதுங்கள். அவ்வளவுதான் நீங்கள் செய்ய வேண்டியது. சரியாகப் பூர்த்தி செய்தீர்களானால் இடமிருந்து வலமாகவும் மூன்று, மூன்று எழுத்துக்களைக் கொண்ட அதே சொற்கள் உருவாகியிருப்பதைக் காண்பீர்கள். உங்கள் விடைகள் சரியா என்பதை உறுதிப்படுத்த அது உதவும்.

இனியென்ன? உங்கள் திறமையைக் காட்டுங்கள். இங்கு தரப்பட்டுள்ள தரவுகள் மேலிருந்து கீழாக அமையும் சொற்களுக்கு உரியவை என்பதை மறந்து விடாதீர்கள்.



மேலிருந்து கீழ்

1. மேன்மை தங்கிய
2. உந்த
3. பறக்கும் இப்பூச்சி கொட்டும்
4. பிழைத்துப் போதல்
5. வீதிகள் இணைவது இங்கே
6. புரவி
7. தள்ளிப் போ
8. சுவையான பட்சணம்
9. தலையில் முடிவது
10. பாக்குத் தரும் மரம்
11. கை அளவீடு
12. ஒரு பாத்திரம்
13. மிச்சம்
14. சமிபாட்டு உறுப்பு
15. சிதம்பரம்
16. மகாகவி
17. விதம்
18. பூட்டான் தலைநகர்
19. ஏதிலி
20. கல்லெறியும் கருவி
21. வீட்டின் முன்புறம் அமைந்திருப்பது
22. பாண்டிச்சேரிக்கு இப்படியும் ஒரு பெயர்
23. சோக
24. விடியற் காலம்

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 100 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 75 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50 |

**கவனிக்கவேண்டிய விதிகள்**

(1) அர்ச்சுனாவில் பிரசுரமாகியுள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவேண்டும்.

(2) எழுத்துக்களைத் தெளிவாக எழுத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) எழுத்துக்களை வெட்டி அல்லது திருத்தி எழுதக்கூடாது.

(4) சொந்த முயற்சியாகவே இருக்க வேண்டும்.

(5) பதினைந்து (15) வயதிற்கு உட்பட்டவர்களே பங்குபற்றலாம்.

(6) தமிழாசிரியர் அல்லது அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(7) முடிவுதிகதி 15-02-2000

அனுப்பவேண்டிய முகவரி: அர்ச்சுனா
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


**இங்கே வெட்டுக**

பெயர்:-.............................................
பாடசாலை:-.......................................
பிறந்த திகதி:-...............................
மேற்குறித்த விவரம் சரியென உறுதி செய்கிறேன்.

.................................
ஆசிரியர்/அதிபர்
கையொப்பம்

***(46 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)***

## A இல் தொடங்கும் இரண்டு எழுத்துச் சொற்கள்




**A** இல் தொடங்கும் இரண்டு எழுத்து ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள் -

(1)............ (2)..............

(3)............ (4)..............

← சரி (✓) எண்ணிக் கையைக்கூட்டில்எழுதுக.

## எவ்வளவு கிடைத்தது?

**4 - மிகவும் நன்று**
**3 - நன்று**
**2 - மேலும் முயற்சி செய்ய வேண்டும்**
**1 - விடாமல் கற்க வேண்டும்.**
**0 - படிக்கத் தொடங்குக!**

(சரி, பிழை பார்ப்பதற்கு ஆங்கிலம் தெரிந்தவரின் உதவி கிடைக்கவில்லையா? சரி, சரி. இதோ விடைகள்

**(1) AM (2) AN (3) AT (4) AS**

# சுதந்திர தேவியின் சிலை

அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரத்தின் துறைமுகத்தில் ஒரு சிலை நிற்கிறது. இதுவே உலகில் உள்ள மிகப் பெரிய சிலையாகும். இது 153 அடி பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. கையில் சுடரை ஏந்தியவாறு நிற்கும் இந்தச் சிலையின் மொத்த உயரம் (பீடத்துடன்) 305 அடிகளாகும்.



"சுதந்திர தேவியின் சிலை" என இதற்குப் பெயரிட்டுள்ளனர். வலது கையில் ஏந்தி நிற்கும் தீபம் உலகெங்கும் சுதந்திரம் எனும் ஒளி வீசுவதையும் இடது கையில் அமெரிக்க சுதந்திரப் பிரகடனத் திகதி குறிப்பிட்ட சாசனமும் உள்ளது. இந்தச் சிலையின் காலடியில் உள்ள அறுந்த நிலையில் உள்ள சங்கிலி அடிமைத் தளையை அறுத்தெறியத் துடிக்கும் மக்களைக் குறிக்கிறதாம்.

இரவு நேரங்களில் சிலையின் கையிலுள்ள தீச்சுடர் மின்சார ஒளியுடன் கண்ணைப் பறிக்கிறது. இது கப்பல்களுக்கு கலங்கரை விளக்காகவும் விமானங்களுக்கு எச்சரிக்கை விளக்காகவும் விளங்குகிறது.


இத்தனை பெரிய சிலையின் அடியில் இருந்து தலை வரை நடந்தே செல்லலாம். சிலையின் உட்புறத்தில் இதற்கெனப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. வியப்பிற்குரிய அதிசயமான இந்தச்சிலை 1884ஆம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தால் அமெரிக்காவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. பிரடெறிக் அகஸ்டிபல் தோல்டி என்னும் புகழ்பெற்ற சிற்பியே இந்தச் சிலையை அமைத்தார். ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரைகள்......

## அருட்கவி சீ. விநாசித்தம்பி



ஆயகலைச் செய்திதரும் உதயன் நல்கும்
"அர்ச்சுனா" என்னும்வெளியீடு, கல்வி
தோயுமினம் பாலருக்கும் யாவருக்கும்
சூரியன்போல் கலைபரப்பி, நுண்விஞ்ஞானம்
ஏயபல கணிதவகை, இசை, சிற்பங்கள்,
இலங்கு பழங்கவிஞர்முது ஞானியர்கள்,
தூயவழி நாகரிகம், விளங்க வைத்து
சொர்ணமலை மேருவைப்போல் வாழிவாழி.

அருட்கவி
*சீ.விநாசித்தம்பி*

## யாழ். மத்திய கல்லூரி அதிபர்



மகாபாரதத்தில் அர்ச்சுனன் ஒரு 'மாவீரன்'. துரோணாச்சாரியர் தனது வில்வித்தையைக் கற்பித்து தனது 'கற்பித்தல்' பெறுபேற்றையும் 'கற்றலின்' திறமையையும் அருச்சுனன் ஊடாகவே உலகிற்குக் காட்டியவர். இலட்சியம் கொண்ட திடவுள்ளம், இலக்குத் தவறாத குறிக்கோள், மனிதத்தை நேசிக்கும் மகத்துவம் இவை எல்லாவற்றையும் ஒருசேர அருச்சுனனாக மகாபாரதம் காட்டியது. "மறமாயின், உற வாகிலும் அறத்துக்காக அழித்தலே தர்மம்" எனப் போதித்த கிருஷ்ணாபோதேசம் கூட அருச்சுனனை முன்நிறுத்தியே போதித்தது. நற்குருவினால் மாணவன் பெருமை பெறுகிறான்; நன்மாணவனால் குருவும் பெருமை பெறுகின்றார். இவ்வகையில் எமது மாணவ உலகிற்கு அருச்சுனனின் பெயரைத் தாங்கி வரும் "அர்ச்சுனா" ஞானம் தேடும் ஓடமாக பயணிக்கும் எனத் துணியலாம்.

அர்ச்சுனாவின் கடந்தகால இதழ்கள் இதற்குச் சான்றாக நின்றன. யுத்தத்தின் வெளியீடாகிய குண்டுப் புகைகளும், துப்பாக்கி ஓசைகளும் வான் - தரை - தொடுகடல் ஊடாக உறுமி உமிழ்ந்த பேரூர்திகளின் இரைச்சல்களும் ஆங்காங்கே சிதறியும் குவிந்து கிடந்த பிணங்களின் புதைகுழிகளும் அர்ச்சுனாவுக்கு கீதாபோதேசத்தை போதித்ததால் தெளிவுபெற்று இன்று மீண்டும் அறிவுக்களத்தில் "அர்ச்சுனா" இறங்கி இருக்கின்றான்.

எமது கல்விக்களத்தில் துரோணரில்லா அருச்சுனர்களும், அருச்சுனர்கள் இல்லாத துரோணர்களுமாக செயற்பட்டு வெறும் 'காகிதப் பெறுபேறை' மட்டும் பெறமுயலும் அருச்சுனர்களது பலவீனத்தில் 'பணம் குவிக்கும்' இலக்கை மட்டும் கொண்ட பல துரோணர்களின் முகமூடிகள் கிழிய அர்ச்சுனா தனது அம்பை இலக்கு வைக்கும் என நம்புகிறேன்.

நல்லாசானாக, நல்மாணாக்கனாக, நற்குடிமக்களாக எமது சமூக அமைவு அசைவுபெற அர்ச்சுனாவின் கரம் திசைகாட்டி நீளட்டும்.

அன்புடன்
*க.இராசதுரை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாட்டுப் பாடிய பாரதியார்




சமத்துவம் சனநாயகத்தின் உயிர்நாடி. நாட்டின் விடுதலையை வேண்டி நின்ற பாரதியார் சமுதாய சுதந்திரத்தையும் நாடி நின்றார். ஒன்றே குலம் என்பது திருமூலர் திருவாக்கு. சாதி இரண்டொழிய வேறில்லை எனப் பாடியவர் ஔவையார். அவ்வழியில் சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தவர் பாரதியார். சிறுவர்களே! நீங்கள் நாடு போற்றும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வரவேண்டும். படத்திலுள்ள பாடலைப் பாடிப்பாருங்கள். அதன்படி நடந்து பாருங்கள்.

வெளியிடுவோர்:- நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org